Chundikuli Branch Library
10 SEP 1986
Nallur Branch Library

இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

விலை: 1/50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 386 ★ 1988 ஜூலை 29 வெள்ளிக்கிழமை

**பகிரங்க விரிவுரை**

**கொர்பச்சோவ்-றீகன் சதியை தோற்கடி!**

**சோவியத் யூனியனில் நடப்பதென்ன.**

இடம்: கண்டி, சிங்கள ஜாதிக ஹோட்டேல்
காலம்: 11-8-88 வியாழக்கிழமை பி.ப. 4.30 மணி

இடம்: சிலாபம் வை. எம். பி. ஏ. மண்டபம்
காலம்: 13-8-88 சனிக் கிழமை, பி.ப. 4.30 மணி

இடம்: அம்பலாங்கொட, நகர மண்டபம்
காலம்: 20-8-88, சனிக் கிழமை, பி.ப. 4.30 மணி

# எதிர்ப்புரட்சி இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஓர் ஆண்டு பூர்த்தி!

## வட—கிழக்கிலிருந்து இந்திய - இலங்கை இராணுவத்தை வெளியேற்ற தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டு!

கொலைகார காந்தி-ஜயவர்தன அரசாங்கங்களின் நெருக்கடி பெரும் அளவில் உக்கிரம் கண்டு, தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இராணுவ பிற்போக்கு சர்வாதிகார மிரட்டல் ஒருபுறமும், தேசிய சுதந்திரத்துக்கான தமிழ் தேசிய இனத்தின் எதிர்பார்ப்புக்கள் ஆழமடைந்து தொழிலாள வர்க்கத்தின் வர்க்கப் போராட்டங்களின் புதிய கட்டத்தின் ஆரம்பம் மறுபுறமும் பிற்போக்கு இந்திய-இலங்கை உடன்படிக்கையின் ஓராண்டு நிறைவை குறிக்கின்றது.

இந்த அரசியல் நிலைமையானது தமிழ், சிங்களம் பேசும் தொழிலாள வர்க்கம் இந்தியத் தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்தை அணி திரட்டி யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்றவும் இந்திய இலங்கை உடன்படிக்கையை சிதறடித்து இந்திய - இலங்கைப் படைகளை வட-கீழ் மாகாணங்களில் இருந்து துரத்தியடிக்கவும் இந்தியத் துணைக் கண்டத்தில் சோசலிச புரட்சியின ஒரு பாகமாக தமிழ் ஈழம்-இலங்கை சோசலிச குடியரசு முன்நோக்கின் அடிப்படையில் சளைக்காமல் போராட வேண்டியதன் பேரவசியத்தை உண்டுபண்ணி உள்ளது

1987 ஜூலை 29ம் திகதி உடன்படிக்கை கைச்சாத்தான நாளில் வட-கீழ் மாகாணங்களில் குவிக்கப்பட்ட இந்திய இராணுவத்தின் எண்ணிக்கை இன்று 150,000ஐ எட்டியுள்ளது. கடந்த ஓராண்டினுள் இந்த ஆக்கிரமிப்பு இராணுவம், சிங்கள இனவாத ஆக்கிரமிப்பு இராணுவம் நான்கு வருட காலப் பகுதியுள் செய்ய முடியாது போனதும், அளவிட முடியாததுமான அழிவுகளை தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக செய்துள்ளது. அதோடு அவற்றினை தொடர்ந்தும் செய்து வருகின்றது. இதுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அங்கத்தினர்கள் பொது மக்கள் 3000க்கும் அதிகமானோரைக் கொன்றுள்ளது. பல்லாயிரக் கணக்கானோரை பலத்த காயத்துக்குள்ளாக்கி, ஆயுட் கால அகதிகள் நிலைக்கு தள்ளியுள்ளது. சொத்து அழிவுகள், கொள்ளை, கற்பழிப்பு எல்லாம் காட்டுமிராண்டி யுத்தத்துடன் கட்டவிழ்க்கப்பட்டன.

ஒப்பந்தத்துடன் ஜயவர்தன அரசாங்கம், வட-கீழ் மாகாணங்களில் இருந்து விடுவித்த 23,000 இலங்கைப் படைகளை உள்ளடக்கிய 60,000 இராணுவ - பொலிஸ் படை அணிகள் இலங்கைத் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. இப் படை அணிகள் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ், இங்கிருந்து நாடுகடத்தப்படவுள்ள 3 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களுக்கும், வாழ்க்கைத் தரம், தொழில் அழிப்பு, தனியார்மயமாக்கல்களுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடும் நகர்புறத் தொழிலாளர்களுக்கும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) சிங்கள குட்டி முதலாளித்துவ இனவாத இயக்கத்தை முறியடிக்கும் சாட்டில் கிராமப்புற மக்களையும் ஒடுக்க அணி திரட்டப்பட்டுள்ளது

இப் பிராந்தியத்தில் ஏகாதிபத்தியவாதிகளின் முக்கிய ஏஜன்டான இந்திய முதலாளி வர்க்கம் உலகின் நான்காவது பெரும் இராணுவ சக்தியின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் பின் வாங்கச் செய்துள்ளது என்பது உண்மையே. எனினும் 1971ல் பங்களாதேஸ் விடுதலைப் போராட்டத்தை அடிமைப்படுத்தி, ஏகாதிபத்திய சார்பான முதலாளித்துவ கைப்பொம்மை ஆட்சியை திணித்த அதே வேகத்தில் வட-கீழ் மாகாணங்களில் அதனைச் சாதிக்க ராஜீவ் காந்தி அரசாங்கத்தால் முடியாது போய் விட்டது. அதற்குப் பதிலாக ஆழமடைந்துவரும் யுத்தசுழியில் காங்கிரஸ் அரசாங்கம் மூழ்கியுள்ளது.

ஒரேயடியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விட எடுத்த முயற்சி பிழைத்து விட்டது என்பதை ஒப்புக் கொண்டு, பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் வட-அயர்லாந்தில் செய்வது போல் நீண்ட யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே. சி பந்த் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்டது இதுதான்: 'கிளர்ச்சிகர நிலைமை நிலவும் பல இடங்கள் உலகில் உள்ளன. ஐக்கிய இராஜ்யத்தின் இராணுவம் உட்பட தீர்க்கமாக தயார் செய்யப்பட்ட இராணுவங்கள் அவற்றை சிதறடிக்க அதிக காலம் எடுக்க வேண்டும...'',

இந்தியா ஒரு ஏகாதிபத்திய நாடில்லாத போதிலும் அது ஜயவர்தன, ஏகாதிபத்தியவாதிகளுடனான சதிகளின் மூலம் வட-கீழ் மாகாணங்களை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. எனினும் இது இராணுவ ஒடுக்கு முறைகள் சமபந்தப்பட்ட மட்டில் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் வட-அயர்லாந்திலும் இஸ்ரேல் ஏகாதிபத்திய ஏதிகள் மேற்குக் கரையோரத்திலும் ஆக்கிரமித்துக் கொண்டு செய்யும் இராணுவ ஒடுக்கு முறைகளுக்கு சமமானது. இந்திய

தேசிய இனத்தின் தேசிய உரிமைகளுக்கு ஆதரவளிக்கின்றது அல்லது 'கூட்டுச் சேரா கொள்கையை' கடைப் பிடிக்கின்றது என குட்டி முதலாளித்துவ தமிழ் விடுதலை இயக்கங்களைப் போலவே சமசமாஜ-ஸ்டாலினிச-மத்தியவாத தலைவர்கள் நடாத்திவரும் நப்பாசை தமிழ் தேசிய இனத்தின் இரத்தத்தினுள் அடியுண்டு போயுள்ளது.

இந்திய பிற்போக்கு முதலாளி வர்க்கம் உரிய முறையில் தமிழ் தேசிய இனத்தின் கடும் வெறுப்பினை திரட்டிக் கொண்டுள்ளது. அத்தோடு தேசிய சுதந்திரத்தை வென்றெடுக்கும் அவசியம் எப்போதுமில்லாத விதத்தில் ஆழமடைந்துள்ளது.

ஆயிரக்கணக்கான இந்திய படையாட்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளதோடு ஜயவர்தன அரசாங்கம் செய்தது போல் கோடானு கோடி ரூபாய்களை செலவழித்து நடத்திவரும் யுத்தத்திற்கு எதிராக இலங்கையிலும், தமிழ் நாட்டிலும், தென் இந்தியாவிலும். இந்தியா பூராவும் தொழிலாள வர்க்கத்தினதும், ஏழைகளதும் எதிர்ப்பு முழு அளவில் வெளிப்பாடாகாது இருப்பின், அதற்குக் காரணம் தொழிலாள வர்க்கத்தின் உள்ளேயுள்ள துரோக தலைவர்களின் கேவலக் காட்டிக் கொடுப்புக்களே. தமிழ் நாடு அரசாங்கத்தை கலைத்து, அங்கு மத்திய அரசாங்கத்தின் ஆட்சியை திணித்ததற்கு ஒரு முக்கிய காரணம் இந்த எதிர்ப்புகள் ஏற்படுவதை தவிர்ப்பதே.

ஜயவர்தன அரசாங்கம் இந்தியப் படைகளின் தீர்க்கமான வெற்றிகளின் மீது ஏறி

முதலாளி வர்க்கம் தமிழ்நிறக எடுத்த முயற்சி பிழைத்து விட்டது. இந்த அரசியல் நிலைமையில் தொழிலாள வர்க்கத்தினதும், ஏழைகளதும் போராட்டங்கள் எழுச்சி காண்பதானது, முதலாளித்துவ வர்க்க ஆட்சியை உயிராபத்தான நிலைக்கு முகம் கொடுக்கச் செய்துள்ளது. ஜயவர்தன அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

சமீபத்தில் பாரிசில் நடைபெற்ற 'இலங்கைக்கு உதவி வழங்கும் குழுவின்'' கூட்டத்தில் இலங்கையின் பொருளாதாரம் 'ஆபத்தான நிலைமையை' அடைந்துள்ளதாக உலக வங்கி அறிக்கை குறிப்பிட்டது. வேலையின்மை நூற்றுக்கு 18 வீதத்தை தாண்டியுள்ளதென்றும் பொருளாதார வளர்ச்சி நூற்றுக்கு 2%த்திலும் குறையாத வீழ்ச்சி கண்டுள்ளதாயும், வெளிநாட்டு கடன் கொடுப்பனவு எந்தவொரு காலத்திலும் இல்லாத விதத்தில் அதிகரித்து, வெளிநாட்டு வளங்கள் 10 ஆண்டுகளுக்கு பின்னர் அதி குறைந்த மட்டத்தில் உள்ளதாயும் உலக வங்கி ஜயவர்தன அரசாங்கத்துக்கு நினைவூட்டியுள்ளது 40 அமைச்சுக்களை 16 அமைச்சுக்களாக குறைப்பது, அரசாங்க ஊழியர்களை நூற்றுக்கு 25% ஆல் வேலை நீக்கம் செய்வது, ரூபாவை மதிப்பிறக்கம் செய்வது, தனியார் மயமாக்கம், தோட்டத்துறையில் இலட்சக் கணக்கான தொழிலாளர்களை வெளியேற்றி 'மறு சீரமைப்பு' செய்தல் என்பனவே உலக வங்கி விதித்துள்ள பணிப்புக்களாகும்.

ஏகாதிபத்திய வங்கியாளர்களின் இக் கட்டளைகள், தொழிலாள வர்க்கம் புதிய தாக்குதல்கள் பலவற்றிற்கு முகம் கொடுக்கும் நிலையிலே

★ 2ம் பக்கம் பார்க்கவும்

**வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!**

# எதிர்ப்புரட்சி இந்திய-இலங்கை ஒப்பந்தத்...

[முன் பக்கத் தொடர்ச்சி]

விடுக்கப்பட்டுள்ளன: இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ் 3 இலட்சம் தொழிலாளர்கள் நாடு கடத்தப்படுவதற்கு எதிராக போராடுவது அவசியம் என தோட்டத் தொழிலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். பாட்டா, ரொபாக்கோ முதலான பன்னாட்டு கம்பனிகளைப் போலவே தனியார் முதலாளித்துவ கம்பனிகளான சமூவேல்சன், சிலோன் பிரின்டர்ஸ் போ,ாட்டங்களும், அரசாங்க துறையில் தொலைத் தொடர்பு திணைக்கள ஊழியர்களின் பிரச்சாரமும், தொழிலாள வர்க்கத்தின் புதிய சுற்று வர்க்க எதிர்த் தாக்குதலை சுட்டிக் காட்டுகின்றன. வறுமையும், வேலையின்மையும் கிராமப் புறங்களில் வெடிப்பு நிலைமையை சிருஷ்டித்துள்ளன.

யூ. என். பி. அரசாங்கம் உள்ளடங்கலான முதலாளி வர்க்கத்துக்கு, சர்வாதிகார இலக்குடன் தொழில்படுவதை விட வேறு மாற்றுவழி இல்லை. இராணுவத்தை பலப்படுத்தல், ஒடுக்குமுறையை கட்டவிழ்த்தல், இரகசிய குண்டர் கும்பல்களை சிருஷ்டித்தல், படுகொலையை சட்ட ரீதியான தாக்கும் சட்டங்களை இயற்றுதல், ஆகியன இராணுவ சர்வாதிகார இலக்கில் செய்யும் தயாரிப்புக்களாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடாத்திய பேச்சு வார்த்தைகள் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் ஓராண்டு பூர்த்தியுடன் பொறிந்து போனமையானது இந்திய-இலங்கை அரசாங்கங்களின் நெருக்கடியை உக்கிரம் அடையச் செய்துள்ளது. இந்திய-இலங்கை முதலாளித்துவ வர்க்க ஆட்சியை பேணும் உப-ஏஜன்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மாற்றுவது அல்லது அதனை இராணுவ பலத்தின் மூலம் துடைத்துக் காட்டுவதே காந்தி அரசாங்கம் விடுத்த கட்டளையாகும்.

இந் நிலைமையில் யுத்தத்திற்கு மத்தியிலும் விடுதலைப் புலிகள் இந்தியா - இலங்கை உடன்படிக்கையின் சரத்துக்களை மாற்றுவதற்கு திரும்பியுள்ளமை அவர்களின் அரசியல் வங்குரோத்தினையும், பலவீனத்தையும் மீண்டும் மீண்டும் ருசுப்படுத்தி உள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களை நீண்டகால அடிப்படையில் இணைத்தல், காணிப் பங்கீட்டு அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்குதல் என்ற விதத்தில் உடன்படிக்கையை மாற்றியமைக்கும் விடுதலைப் புலிகள் யோசனைகளை முன்வைத்தன. இவை காந்தி அரசாங்கத்தினல் நிராகரிக்கப்பட்டன. உடன்படிக்கையை அப்படியே ஏற்கவேண்டும் என்பதை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களால் வெளியிடப்பட்ட புதிய அறிக்கை இந்திய-இலங்கை உடன்படிக்கையை 'அடிமைப் பிரகடனம்' என வருணித்துள்ளது. அது மேலும் கூறியதாவது:

"இந்திய இராணுவத்தினல் அநியாயமான முறையில் -தொடுக்கப்பட்டுள்ள-9 மாதங்கள் கழிந்து போயுள்ள யுத்தத்தில் பெருமளவிலான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பெண்கள் கற்பழிக்கப் பட்டுள்ளனர். கோடிக் கணக்கான பெறுமதிவாய்ந்த சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. வன விலங்குகள் கொல்லப்பட்டுள்ளன காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. தமிழ் பிரதேசங்களை அழித்து, தீமூட்ட கோடிக்கணக்கான பணம் செலவிடுவதன் மூலம் மக்கள் படுகொலைகளை செய்யும் அளவுக்கு சென்று கடந்த நாற்பது ஆண்டுக்கால ஒடுக்குமுறைக்கு ஆளான தமிழ் தேசிய இனத்துக்கு இந்தியா ஜனநாயகம் போதிக்க முயலகிறது."

இந்தியப் படைகளின் 'கரிசன் அரசில்' மாகாண சபை தேர்தல் நடாத்தி, ஜனநாயகம் உருவாக்கப்பட்டுள்ளதாக உலகுக்கு காட்ட இந்தியா முயல்வதாக அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. இவை அனைத்தும் உண்மை. அவ்வாறே இந்தியப் படைகளுடன் அவர்கள் வீரத்துடன் மோதுகின்றனர். எனினும் அவர்களின் வேலைத் திட்டம் என்ன? "நீண்ட யுத்தத்துக்கு தமிழ் தேசிய இனத்தை தயார் செய்வோம்" என தமிழீழ விடுதலை புலிகளின் தலைமை காந்தி அரசாங்கத்துக்கு சவால் விடுத்துள்ளது. அவர்களின் வேலைத் திட்டம்; யுத்தம், பேச்சு வார்த்தை, இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர் பக்கம் திரும்பல் ஆகியன,

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமை அத்தகைய கட்டத்தை அடைந்துள்ளது. இந் நிலைமையுள் இந்திய-இலங்கை இராணுவங்களில் இருந்து விடுதலை பாதை தேடும் தமிழ் மக்களை அதிலிருந்து தடுத்து தமது தேசிய தனிச்சிறப்புரிமைவாத வேலைத்திட்டத்துடன் கட்டிப் போட இத் தலைவர்கள் முயல்கிருர்கள்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்நோக்கும் பணிகளும் பற்றிய தனது 1987 நவம்பர் 19ம் திகதிய அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டது:

"சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்பு என்னவாக இருந்த போதிலும் முதலாளித்துவ தேசிய வாதத்தின் கண்மூடித்தனத்தில் இருந்து வெளியேறுவதற்கான ஒரே முன்நோக்கினை தமிழரதும், இலங்கைத் தொழிலாள வர்க்கத்தினதும் இணைந்த போராட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரே முன்நோக்கே வழங்குகின்றது. இந்திய ஆக்கிரமிப்பு தமிழ் தேசிய இனத்தினதும் அத்தோடு தெற்கில் உள்ள சிங்கள வெகு ஜனங்களினதும் ஒடுக்கு முறையின் வர்க்க அடிப்படையை அம்பலப்படுத்தியுள்ளது. இது சிங்கள-தமிழ் பேசும் தொழிலாள வர்க்கத்தின் மேலாதிக்கத்தின் கீழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை வர்க்கப் போராட்டத்துடன் இணைக்க வேண்டியதன் அவசியத்தை தோற்றுவித்துள்ளது. திட்டவட்டமாகச் சொன்னல் தமிழ் ஈழத்தையும் இலங்கையையும் கொண்ட ஐக்கிய சோசலிச அரசுகளின் பதாகையை உயர்த்த வேண்டியுள்ளது".
('இந்திய - இலங்கை ஒப்பந்தமும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்' —தொழிலாளர் பாதை பிரசுரம்)

இம் முன்நோக்குக்குப் பதிலளிக்கும் விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சதாசிவம்பிள்ளை கிருஷ்ணகுமார் (கிட்டு) பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: "...தமிழர்கள் சிங்களவர்களுடன் இணைந்து வர்க்கப் போராட்டம் நடாத்துவதன் அடிப்படையிலேயே தீர்வு ஏற்படும் என சிலர் கூறுகிருர்கள். ஆனல் அது சாத்தியம் இல்லை. எமக்கு எமது வேறுபட்ட தேசியத்தை அங்கீகரிப்பது அவசியம் சிங்கள தொழிலாள வர்க்கத்துடன் இணைந்து இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக போராடுவது நாம் ஓரளவுக்கு சுதந்திரம் வந்த பிறகே சாத்தியம்"

ஒரு வருட கால இரத்தம் தோய்ந்த அநுபவங்களின் பின்னரும் இத் தலைவர்கள் வர்க்கப் போராட்டத்துக்கு எதிராக காந்தி-ஜயவர்தன அரசாங்கங்களிடம் இருந்து 'ஏதேனும் ஜனநாயக உரிமைகளை எதிர் பார்க்கிருர்கள்: உண்மையோவெனில் இந்த ஏதேனும் ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பது ஜயவர்தன அரசாங்கத்தை தூக்கி வீசச் செய்ய வேண்டிய வர்க்கப் போராட்டத்துடன் இணைந்து கொண்டுள்ளது. இந் நம்பிக்கை, எதிர்பார்ப்புக்களுள் தமிழ் விடுதலைப் போராட்டத்தினை சமரசம் செய்யும் அபாயம் உள்ளடங்கியுள்ளது, காந்தி - ஜயவர்தன சதியை சிதறடிக்கக் கூடிய சக்தியான இந்திய, . இலங்கை தொழிலாள வர்க்கப்,ஏழை விவசாயிகள் பக்கம் திரும்புவதில் விடுதலைப் புலிகள் தலைமை தோல்வி கண்டுள்ளது. அவர்கள் ராஜீவ் காந்தி, தி.மு.க. தலைவர் கருணநிதி மற்றும் முதலாளித்துவத் தலைவர்கள் பக்கமே திரும்பியுள்ளனர். எதுவித முதலாளித்துவ தொடர்புகளும் இல்லாத ஈழம் தொழிலாள வர்க்கத்தினல் மட்டுமே இந்திய, இலங்கை தொழிலாள வர்க்கம் பக்கம் திரும்ப முடியும்.

தமிழ் தேசிய இனத்துக்கும் இலங்கைத் தொழிலாளர்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் கூட்டுச் சதிகாரர்களான இந்திய-இலங்கை முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட வேண்டின் தமிழ் ஈழம், இலங்கை, இந்திய பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியத்தை உறுதி செய்யும் இந்திய துணைக்கண்டத்தில் சோசலிச குடியரசினை நிறுவும் முன் நோக்கின் அடிப்படையில் தமிழ் ஈழம்-இலங்கை சோசலிச குடியரசுக்காக போராட வேண்டும்.

பாட்டாளி வர்க்கத்தின் இம் முன்னேக்கு நன்கு தெளிவாகியுள்ள நிலையில் தொழிலாள வர்க்கம் அத்தகைய போராட்டத்தில் குதிப்பதை வன்மையாக எதிர்க்கும் முதலாளித்துவ அரசின் பாதுகாவலர்களாக சமசமாஜ - கம்யூனிச - இ. தொ. கா - நவ சமசமாஜ தலைவர்கள் தொழிற்பட்டு வருகின்றுர்கள்.

தமிழ் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதை தாமதிப்பதையிட்டு காந்தி-ஜயவர்தன அரசாங்கங்களை குறை கூறிவரும் சமசமாஜ-கம்யூனிச-நவ சமசமாஜ கட்சித் தலைவர்கள், இந்திய-இலங்கை உடன்படிக்கையை உடனடியாக அமுல் செய்யக்கோரும் அறிக்கை ஒன்றை அவர்களின் முதலாளித்துவ மக்கள் முன்னணியான 'ஐக்கிய சோஷலிச முன்னணி' ஊடாக வெளியிட்டுள்ளனர். "வட-கிழ் மாகாணங்களில் சமரசத்துக்கு எதிரான சகல சக்திகளையும் நிராயுதபாணியாக்கவும் நடுநிலைப்படுத்தல் உட்பட அப் பிரதேசங்களை வழமைக்கு கொண்டுவரும் அவசிய நடவடிக்கைகளை எடுப்பது இதன் பொருட்டுச் செய்ய வேண்டிய திடீர் பணியாகும்".

உடன்படிக்கையின் ஓராண்டு பூர்த்தியையொட்டி மக்கள் முன்னணி வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு கூறுகின்றது: "அந்த உடன்படிக்கை இலங்கை இனப் பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணும் விதத்தில் முதலும், சிறந்ததுமான முற்போக்கு நடவடிக்கையாகும். அத்தோடு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே தோழமை உறவுகள் வளர்ச்சி காண தடையாக இருந்த பதட்ட நிலையைக் குறைக்கவும் இப் பிராந்தியத்தின் கூட்டுச் சேரா நிலையை பலப்படுத்தவும் உதவிற்று."

தமிழ் தேசிய இனப் பிரச்சினைக்கு தொழிலாள வர்க்கத்தினல் மட்டும் வழங்கக் கூடிய தீர்வினை கீழ்ப்படுத்தி, ஏகாதிபத்தியவாதிகளும் முதலாளிகளும் தமது வர்க்கத் தேவைகளைக் காக்கவும், ஆட்சியை தொடரவும் செய்து கொண்டுள்ள உடன்படிக்கைக்கு இந்த விதத்தில் புகழ்மாலை சூட்டுவதில் சமசமாஜ-கம்யூனிச-நவ சமசமாஜ தலைவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். காந்தி-ஜயவர்தன அமெரிக்க ஆட்சியாளர்களை முன்னணியில் கொண்ட ஏகாதிபத்தியவாதிகள் இடையே புதிய மட்டத்திலான உறவுகளுக்காக தமிழ் விடுதலைப் போராட்டத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிப்பதை மூடிமறைக்கும் இந்த தலைவர்கள் அதற்கான பொறுப்பினை தமிழ் விடுதலைப் போராட்டத்தின் மீதும் விடுதலை இயக்கத்தின் மீதும் சுமத்திவிடும் கேடுகெட்ட பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய-இலங்கை முதலாளிகளுக்கு முழுமனே அடிபணியாததையிட்டு இத் தலைமைகளின் மூர்க்கமான தாக்குதல் அவர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ளது.

முதலாளித்துவ ஐக்கிய அரசினை காப்பதற்கு எடுக்க வேண்டிய சிறந்த நடவடிக்கைத் இந்திய இராணுவத் தாக்குதலை தமிழ் விடுதலை, இயக்கத்தின் மீது தொடுப்பதே என்பதை ஏகாதிபத்திவாதிகள், இந்திய-இலங்கை முதலாளிகளைப் போலவே இத்தலைவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இவர்கள் பிரதிநித்துவம் செய்வது தொழிலாள வர்க்கம், ஏழை விவசாயிகள், ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் உரிமைகளை அல்ல. இத் தலைவர்கள் ஏகாதிபத்திய வங்கியாளர்கள், பன்னுட்டுக் கம்பனிகள், உள் நாட்டு முதலாளிகளின் நலன்களின் பேரில் தொழிலாள வர்க்கத்துக்கு கால் விலங்கு போடப் போராடி வருபவர்கள். இவர்களின் 'ஐக்கிய சோசலிச முன்னணி' என்ற முதலாளித்துவ மக்கள் முன்னணியின் வேலைத் திட்டமானது பன்னுட்டு கம்பனிகளை 'தேசிய பொருளாதாரத்துடன்' பிணைப்பது, ஏகாதிபத்திய வெளிநாட்டு மூலதனத்தை 'அவசியமான விதத்தில்' அழைப்பது, ஏகாதிபத்திய சடைகளுக்கு இலகுவான நிலைமைகளை ஏற்படுத்துவது, சுதேச முதலாளிகளுக்கு 'நியாயமான இலாபத்துடன்' கூடிய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட சந்தர்ப்பம் அளிப்பது பற்றிய முதலாளித்துவ வேலைத் திட்ட மாகும்.

பாட்டாளி வர்க்கத்தை முதலாளி வாக்கத்துடன் கட்டிப் போடுவதற்கு செய்யும் இநதக் கேவலமான காட்டிக் கொடுப்புக்களின் முண்டு பலத்துடன் தொழிலாள வர்க்கத்துக்கும் ஏழைகளுக்கும் எதிரான இந்திய-இலங்கை முதலாளிகளின் இராணுவ எதிர்ப் புரட்சி திட்டமும், பாசிச சக்திகள் முன்னணிக்கு வரும் ஆபத்தும் வளர்ச்சி காண்கிறது. ஏகாதிபத்திய பிடிக்கும்,

★ 8ம் பக்கம் பார்க்கவும்

# முதலாளித்துவ மக்கள் முன்னணியை தகர்த்தெறி!

— கடந்த இதழ் தொடர்ச்சி —

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் குழுவின் அறிக்கை 1988—ஏப்ரல்—15

வேலைத்திட்டம் இத்துடன் நிற்கவில்லை. ''வேறு அரசுகளின் பன்னாட்டு முதலாளிகளுடன் இது வரை காலம் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார இணைப்பினை ஒப்பந்தங்களை, கிழித்து எறியும் அளவிற்கு ''சோசலிச முன்னணி'' இரக்கம் அற்ற ஒன்றல்ல. அவை 'பாதுகாப்பாக வைக்கப்படும்'' ஆரம்பமாக, இந்த வெளிநாட்டு கடன் அவற்றின் வட்டி என்பவற்றை வழங்க முழு இறக்குமதி வருவாயில் குறிப்பிட்ட விகிதம் மட்டும் பயன்படுத்தப்படும்'' 'ஆரம்ப காலத்தில் தேசிய தனியார் துறை தேசிய தேவைக்கும் தேசப்பற்றுக்கும் ஏற்ப விளங்க வேண்டியதுடன் சாதாரண இலாபம் மட்டும் ஈட்டும் வேளை அதற்கு கிடைக்கும். வர்த்தகத்திலும். தோட்ட விவசாய, மீன்பிடிகைத்தொழில், நீர்வளக் காணி, [illegible] அபிவிருத்தியிலும், சுற்றுடல், மின்சாரகைத்தொழில் பிரிவிலும் இச்சகல இடங்களிலும் மக்கள் முன்னணியின் முதலாளித்துவ செயற்பாடு கொண்டு நடத்தப்படும் என கூறப்பட்டுள்ளது.

மக்கள் முன்னணி அரசாங்கத்தின் கீழ் 'முதலாளித்துவ ஜனநாயகம்' ''விஸ்தரிக்கப்படும். மக்கள் முன்னணி அரசாங்கத்திற்கும் அவசரகால சட்டம் தேவை புதுமை என்னவெனில் அதன் கீழ் ''அடிப்படை மக்கள் உரிமை'' அடிப்படை மனித உரிமையும் பறிக்கப்படாது பார்க்கப்படும்! இம்மக்கள் முன்னணி தற்போதைய நிறைவேற்று ஜனாதிபதி முறையை அகற்றி பழைய பாராளுமன்ற அமைப்புக்கு செல்ல சபதம் செய்துள்ளது; அத்துடன் நின்று விடாது மக்கள் முன்னணி ''நீதித்துறையின் சுயாதீனத்தையும் நன்கு பேணும்.''

ஐக்கிய சோசலிச முன்னணியின் ''சோசலிசத்''தின் கீழ் தொழிலாளருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் ''இடம்'' உண்டு. பேரம் பேசவும் கைத்தொழில் நீதிமன்ற தீர்ப்புகளை துரிதப்படுத்தவும், தமது சுரண்டலை அபிவிருத்தி செய்யும் நடைமுறையில் பங்கு கொள்ளவும், காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் தேசிய குறைந்த பட்ச சம்பளத்தை பெற்றுக் கொள்ளவும், தற்போதை தனியார் மயமாக்கலுக்கு எதிராக போராடுவதற்குப் பதில் தமது எதிர்கால அரசாங்கத்தின் கீழ் தனியார் மயமாக்கலுக்கு ஆட்படாதிருக்கவும் தொழிலாளருக்கும் தொழிற் சங்கங்களுக்கும் மக்கள் முன்னணி அரசாங்கத்தின் கீழ் வாய்ப்புக் கிட்டும் என சமசமாஜ–கம்யூனிச, நவ சமசமாஜக் கட்சி தலைமைகள் பெருமிதத்துடன் அறிவிக்கின்றனர்.

கேவலமான இந்த முதலாளித்துவ வேலைத் திட்டத்தை சமர்ப்பித்ததன் பின் முதலாளித்துவ மக்கள் கட்சியிடம் கட்டுண்ட சமசமாச–கம்யூனிச நவசமசமாச தலைமைகளான கபடர்கள், இந்த அறிக்கையூடாக சமர்பித்த மூலோபாயம் இந் நாட்டு முதலாளித்துவ வர்க்க கட்சி மூலோபாயத்தை எதிர் கொள்கையில் சக்தி மிக்க மாற்றுத் திட்டமொன்றுக ''யதார்த்தத்தை''மூலோபாயம் எனக் கூறுகின்றனர். மக்கள் முன்னணியின் ''மாற்று மூலோபாயமானது எந்தவொர் இழப்பினூடாகவும் முதலாளித்துவ, ஏகாதிபத்திய சொத்துடமை உரிமையையும் முதலாளித்துவ ஐக்கிய அரசினையும் பேணுவதும், முடிந்தமட்டும் முதலாளித்துவ ஜனநாயகத்தை பேணுவதும் என்பதை நனவுள்ள எந்தவொரு தொழிலாளியும் விளங்கிக் கொள்வான்.

மக்கள் முன்னணி சமசமாஜ — கம்யூனிச — நவ சமசமாஜ கட்சித் தலைமைகள் இந்த முதலாளித்துவ வேலைத் திட்டத்திற்கு தொழிலாள ஒடுக்கப்படும் மக்களை கீழ்ப்படுத்தும் பொருட்டு கீழ்காணும் மூன்று அம்சங்களில் கண்களில் மண் தூவுகிறது:

★ யூ.என்.பீ. அரசாங்கத்துடன் தொழிலாள வர்க்கத்திற்கும் கிராமப்புற விவசாயிகளுக்கும், தமிழினத்திற்கும் உள்ள மோதலை அங்கீகரித்து, முதலாளித்துவ முன்னணிக்குள் தள்ளிவிடும் பொருட்டு ''யூ.என்.பீ. அரசாங்கத்திற்கு எதிரான பதிலீடு'' தமது முன்னணியே எனக் காட்டுவது.

★ முன்னணியின் வேலைத் திட்டங்களுடாக எதிர காலத்தில் எப்போதாவது ''இறுதியாக இலங்கையில் சோசலிச சமுதாயம்''உருவாகப்போகிறது என்ற வெற்று உறுதி பத்திரத்தை தொழிலாள ஒடுக்கப்படும் மக்களுக்கு சமர்ப்பிப்பது.

★ இன்று தாம் நடைமுறைப்படுத்தும் முதலாளித்துவ வேலைத் திட்டங்களில் ஏதோ ''முற்போக்கு தன்மை''யும் 'வாய்ப்பு'ம் தொழிலாளவர்க்கத்திற்கு உண்டு என பூதாகாரப் படுத்துவது.

1970ல் சுதந்திரக் கட்சி முதலாளிகளை தள்ளிக் கொண்டு சோசலிசத்தின் பக்கம் நடைபோடும் ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்பியதாக கூறும் சமசமாஜ ஸ்டாலினிச தலைமைகளும் சமசமாஜ கட்சிக்குள் அது யூ.என்.பீக்கு பதிலீடு என தொழிலாள விவசாய மக்களை அக் குடையின் கீழ் ஒதுங்கிவிடுமாறு கூறினர், இப்போது அவர்கள் சுதந்திரக் கட்சி யூ.என்.பீக்கு பதிலீடு அல்ல என்றும் 'சுதந்திரக் ட்சி செய்யக் கூடிய ஆகக் கூடிய செயல் இந்த (யூ.என்.பீ) அழிவுமிக்க கொள்கைகளை கடைப் பிடிக்கும் பொருட்டு வேறு கோஷ்டியை நிறுத்துவதே'' எனவும் கூறுகின்றனர். யூ.என்.பிக்கு எதிராக சுதந்திரக் கட்சி பின்னால் செல்லும் மாற்று திட்டமும் யூ.என்.பி.— ஸ்ரீ.ல.சு.க. இரண்டிற்கும் எதிராக ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி பின்னால் செல்லும் மாற்று திட்டமும் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை அகற்றி 'தொழிலாள விவசாயிகளது அரசாங்கத்திற்கான மாற்று திட்டத்திற்கு தொழிலாளர் வர்க்கம் செல்வதை தடுத்து ஓர் முதலாளித்துவ அரசாங்கத்திற்கு பதில் பிறிதோர் முதலாளித்துவ அரசாங்கமொன்றை ஏற்படுத்தும் நச்சு வட்டத்தை சூழ தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை குழப்பியடிக்கும் முயற்சியாகும்.

இது முதலாளித்துவ வர்க்கம் மக்கள் முன்னணி ஊடாக அமுல் செய்யும் செயற்றிட்டமாகும். முதலாளித்துவ வர்க்கமும் ஏகாதிபத்தியமும் ஒரு தடவை இந்த 'மாற்றுத் திட்டத்தை'' அரசாங்கத்தை கைப்பற்றுவது வரை கொண்டு செல்ல அல்லது தற்போது செய்வதைபோல அரசாங்க ஆட்சி இல்லாமலே ஆதரவை பெற்றுக் கொள்கிறார்கள், தொழிலாள வர்க்கத்தின் வர்க்க சுயாதீனத்தை அவ்வளவும் அழித்துப் பலவீனமாக்கி எதிர்ப் புரட்சிகர தாக்குதலை தொடுக்கும் நிலைமைகளை முதலாளித்துவம் சிருட்டிக்கிறது.

இந்த நப்பாசையை ஏற்படுத்துவதற்கான பரிசாக, எழுச்சியாக, பொது இலக்காக இறுதியாக இலங்கையில் சோசலிச சமூதாயத்தை நிறுவும் திசையில் நீண்ட பயணம் செய்வது'' என்ற உறுதியை தொழிலாள ஒடுங்கப்படும் மக்களுக்கு மக்கள் முன்னணி வழங்குகின்றது.

இதற்கான பயணத்தில் 'பல கட்டங்கள்' உள்ளதாக தாம் கைபோட்டுள்ள மக்கள் முன்னணிக்கு தொழிலாளர் ஒடுக்கப்பட்ட மக்களை அடிமைப்படுத்தும் வகையில் மேலுமோர் கபடமான பொய்யினை ல.ச.ச.க.—கம்யூனிச—நவ சமசமாஜ தலைமைகள் கூறுகின்றன, அவர்களது முதலாவது 'கட்டம்' காலனித்துவ ஆட்சியிலும் அதன் பின்னைய முதலாளித்துவ ஆட்சியிலும் ''கொடிய பெறுபேறாக ஏற்படுத்தப்பட்டுள்ள சமூக பொருளாதார திரிபுகளை சரிப்படுத்துவதாகும் அதனை செய்கையில் 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' என்ற பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாக அவர்கள் கூறுகின்றனர் ஜனநாயக உரிமையை மேலும் பேணும் யிலும் பலப்படுத்தும் வகையிலும் அதனை செய்ய வேண்டும். அதே சமயம் ''மக்கள் வாழ்வு குழம்பாமலும் பொறிந்து விழாமலும் இருக்க பார்த்து கொள்ள வேண்டும்'' இதனால் பொருளாதாரத்திலும் சமூக வாழ்விலும் நிலவும் காலனித்துவ நவ காலனித்துவ இலட்சணமுள்ள அரை நிலமானித்துவ, சொத்துடமை தொடர்பை அறுத்துக் கொள்வதில் ஆரம்பித்து'' கிரமக் கிரமமாக அகற்றப்படுவதற்கு இம் முக்கிய வேளையில் எமது கட்சி நடவடிக்கை எடுக்கும் 'பொது இலக்கினை நோக்கி'' ''சில கட்டங்கள் மட்டும் அல்ல'' ''முக்கிய கட்டத்திலும் கூட'' பல கட்டங்கள் உண்டு. இத்துரோக சுற்றுவட்ட சூத்திரம் போன்றவை தொழிலாள வர்க்க ஒடுக்கப்பட்ட மக்களை ஒருங்கிணைத்து ஏகாதிபத்திய முதலாளித்துவ விலங்குகளிலிருந்தும் விடுதலையை பெறுவதற்காக சுய புரட்சிகர செயல்களுடாக முன செல்வதை தடுத்து அவர்களை மேலும் ''இலங்கையில் நிலவும் யதார்த்த நிலைமைக்கேற்ப அனுகூலமாக்கி'' அவ் விலங்குக்குள் கட்டுப்பட்டு நிற்க வேண்டுமென்று கூறி குழப்பியடிப்பதற்கேயாம்.

'காலனித்துவ, நவ காலனித்துவ' முதலாளிகளுக்கு அவர்களின் சொத்து உரிமைகளை கட்டிக் காப்பதற்கு இத் தலைமைகள் கேவலமாக வாக் குறுதியளிக்கிறார்கள், 'வெளிநாட்டு முதலாளித்துவ சுகபோகங்களின் செல்வாக்கு விரைவாகவும், படிப்படியாகவும் முடிவுக்குக் கொணரப்படும்'' என்பன போன்ற முரண்பாடான அறிக்கைகளை இதனாலேயே வெளியிட்டுள்ளனர்; சுதந்திர வர்த்தக வலயத்தில் வெளிநாட்டுக் கொள்ளைக் காரர்களின் சொத்துக்களை தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்குவதற்குப் பதிலாக அவற்றை 'ஆய்வுக்குள்ளாக்கவும்' அவசிய துறைகளை தேசிய பொருளாதாரத்துள் சேர்க்கவும் முயல்வதும் இதற்கே.

இந்த ஏகாதிபத்திய கோட்டைகளை ஆய்வுக்குட்படுத்தும்'' வாய்ப்பு எனப்படுவது மக்கள் முன்னணியினால் தொழிலாள வர்க்கத்துக்கு கிடைக்கும்! இவர்கள் பேசிக் கொள்ளும் தேசியப் பொருளாதாரம் எனப்படுவது ஏகாதிபத்திய சுரண்டலாளர்களுக்கு சதவை திறக்கும் ஒன்றாகும். இந்தச் சுரண்டல்காரர்கள் எடுத்துச் செல்லக் கூடிய 'உச்ச இலாபத்தின் அளவு தெளிவாக தீர்மானிக்கப்படும்.' இது காலனித்துவ நவகாலனித்துவ, அரைக் காலனித்துவங்களுக்கு எதிரானது எனக் கூறிக் கொள்ளும் மக்கள் முன்னணிவாதிகளிடம் இப் பிரச்சினைக்கு தீர்வு கிடையாது. எவ்வாறெனினும் 'ஏகாதிபத்திய சுரண்டலாளர்கள் இல்லாமல் தம்மால் முடியாது என்பதை மக்கள் முன்னணிவாதிகள் தொழிலாள வர்க்கத்துக்கு கூறுகின்றார்கள். உச்ச இலாபத்தையும், பங்கையும் கட்டுப்படுத்தும்' உரிமை முதலாளித்துவ அரசாங்கத்துக்கு கிடைக்கும் எனக் கூறிக்கொண்டு தொழிலாள வர்க்கத்தின் கண்ணில் அடிக்க சமசமாஜ—கம்யூனிச—நவ சமசமாஜ தலைவர்கள் முயல்கிறார்கள்.

ஏகாதிபத்தியத்தின் பிடியினை இலங்கையிலும் மற்றும் காலனித்துவ அரைக் காலனித்துவ, நாடுகளிலும் கொண்டு நடாத்தும் சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் மற்றும் ஏகாதிபத்திய வங்கிகளும் கொண்டுள்ள கொள்கை தொடர்பான மக்கள் முன்னணியின் எதிர்ப் புரட்சித் தன்மையை நன்கு நிரூபிக்கின்றது. மக்கள் முன்னணி கடன்களை திருப்பிச் செலுத்துவதை பகிஷ்கரிக்கவில்லை. ஏனெனில் அத்தகைய ஏகாதிபத்திய பிடியை உடைக்கும் நடவடிக்கையை எடுப்பது ஏகாதிபத்திய வாதிகளுடன் மோதிக் கொள்வதாக அமைவதோடு, தமது தேசிய முதலாளி

★ 4ம் பக்கம் பார்க்கவும்

# முதலாளித்துவ மக்கள் முன்ன

கள் இதற்கு இடமளிக்கவும் மாட்டார்கள். ஆதலால் ''உடன்படிக்கையின் நியந்தனைகளை சரிப்படுத்தும் ஆய்வுகளில்'' ஈடுபடுவதாகவும் கூட்டுச்சேரா நாடுகள் எனப்படுபவற்றின் அரசாங்கங்களை கடன் சுமையில் இருந்து விடுவிக்கும் பொருட்டு 'நடாத்தும் போராட்டத்தில் இலங்கையும் இணைவதாகவும்' மக்கள் முன்னணி வேலைத்திட்டம் குறிப்பிடுகின்றது. இந்த ஏகாதிபத்திய வங்கியாளர்களின் பிடி போலந்து, யூகோசலவாக்கியா ஹங்கேரி, ரூமேனியா போன்ற உருக்குலைந்த தொழிலாளர் அரசுகளில் பொருளாதாரங்களை முதலாளித்துவ அமைப்பினுள் புனருத்தாரணம் செய்யும் முயற்சிகள் இன்று உக்கிரம் கண்டுள்ளன.

சமசமாஜ—கம்யூனிச—நவ சமசமாஜ தலைவர்கள் தாம் ஏகாதிபத்திய வங்கியாளர்களின் தரகர்களாக தொழிற்பட்டுவருவதாக கூறும் அதே சமயம் வங்கியாளர்களுக்கு நெருக்கு கொடுக்குவாரம் நச்சு வலையத்தின் அகப்பட்டுக் கிடக்க வேண்டும் என தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்களுக்கு கூறுகின்றனர்.

ஏகாதிபத்திய அரசியல்—பொருளாதார பிடியினை உடைக்கும் தொழிலாள வர்க்கத்தின் அவசியம் வெறும் ஏகாதிபத்திய எதிர்ப்புக்களுள் மூழ்கடிக்கும் மோசடியின் பின்னர் தேசிய முதலாளிகளின் பிரதிநிதியாக தமது வேலைத்திட்டத்தை மக்கள் முன்னணி பின்வருமாறு குறித்துள்ளது: ''பொருளாதாரத்தின் முக்கிய துறைகள் அரசாங்கத் துறையின் கீழ் இருந்து வருவதோடு அரசாங்கத்துறைக்கு கையேற்பது பெரிதும் நன்மை பயக்காத அவசியமற்ற துறைகளில்களில் ஈடுபடுவதன் மூலம் தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்யும் சந்தர்ப்பம் தனியார் துறைக்கு கிடைப்பதோடு நியாயமான இலாபம் உழைக்கும் வாய்ப்பும் ஏற்படுகிறது''. முதலாளித்துவ பொருளாதாரத்தை 'தேசிய பொருளாதாரம்' என அழைக்கையில் முதலாளிகளுக்கு 'நியாயமான விதத்தில் இலாபம் உழைக்கும் விதத்தில் 'நியாயமான' சுரண்டலுக்கும் உள்ளாக்கும் வாய்ப்பு தொழிலாள வர்க்கத்துக்குக் கிடைப்பதாக மக்கள் முன்னணி வேலைத் திட்டம் குறிப்பிடுகின்றது.

பிராந்திய போக்குவரத்துச் சபையுடன் இணைந்த தனியார் பஸ் சேவையும், அரசாங்க லொறி சேவையுடன் இணைந்த சரக்குவண்டி போக்குவரத்துச் சேவையும், மின்சார புகையிரத சேவையும் மீன் பிடித் தொழிலாளர்களுக்குக் 'ட்ரோலர்' வள்ளங்களும், விவசாயிகளுக்கு முன்னேறிய நீர்ப்பாசன வசதிகளும், அதிக மதிகமான கடனும், அதிகமதிகமாககைத் தொழில்மயமாக்கலும் என்றெல்லாம் யூ.என்.பீ.—சிறீலங்கா வேலைத்திட்டங்கள் முன்னேற்றப்பட்ட அளவுகளில் மக்கள் முன்னணியிடம் இருந்தும் கிடைக்கும் என எதிர்பார்க்கும்படி சமசமாஜ—கம்யூனிச — நவ சமசமாஜ தலைவர்கள் கூறுகின்றார்கள்.

இத் தலைவர்கள் ஏகாதிபத்திய முதலாளித்துவச் சொத்து உறவுகளை 'கட்டுப்படுத்தி' கொண்டு நடாத்தும் முதலாளித்துவ வேலைத் திட்டத்தைத் தூக்கிப்பிடிப்பதன் மூலம் தொழிலாள வர்க்கத்தை தூங்க வைக்கும் அதே வேளையில் ஏகாதிபத்திய நெருக்கடியினுல் வளர்ச்சிகாணும் நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள இலங்கையின் முதலாளி வர்க்கம் தொழிலாள வர்க்கத்தை இரும்புச் சப்பாத்துக்களின் அடியில் நிர்வகிப்பதற்கான வாய்ப்பைப் பெறுகின்றது.

இன்றைய உலக முதலாளித்துவத்தின் நெருக்கடியை எங்ஙனம் றீகன் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாதுள்ளதோ அங்ஙனமே அதன் ஓர் பாகமான காலனித்துவ, அரைக் காலனித்துவ நாடுகளின் நெருக்கடியை யூ.என்.பீ, சிறீலங்கா முதலாளிகளாலோ அல்லது சிறீலங்கா மக்கள் கட்சியின் முதலாளிகளுடன் கூட்டுச் சேரும் சமசமாஜ—கம்யூனிச—நவ சமசமாஜ தலைவர்களாலோ 'கட்டுப்படுத்த' முடியாது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலக ஏகாதிபத்தியவாதிகள் தமது நாடுகளில் முதலாளித்துவ முறையையும் அரைக் காலனித்துவ நாடுகளில் தேசிய முதலாளித்துவ ஆட்சியையும் பிணைத்திருந்த நானாவித நிதி, கடன், வர்த்தக உடன்படிக்கைகள் பொறிந்து, முக்கிய ஏகாதிபத்திய நாடுகள் மோதிக்கொள்ளும் நிலைக்கு நெருக்கடி வளர்ச்சி கண்டுள்ளது. 1971 ஆகஸ்ட் 15ல் ப்ரெட்டன்வூட்ஸ் உடன்படிக்கை உடைந்து போனதின் பின்னர் 1987 அக்டோபர் 19ம் திகதி அமெரிக்க பங்குமுதல் சந்தையில் ஆரம்பித்து முழு ஏகாதிபத்திய உலகையும் பற்றிப்பிடித்த பொறிவு, இந்த நெருக்கடியின் வளர்ச்சி கண்ட நிலையை சுட்டிக் காட்டியது.

இந்த வரலாற்று நெருக்கடி, உற்பத்தி சாதனங்களின் தனியார் உடமையும், முதலாளித்துவ தேசிய அரச எல்லைகளை அடிப்படையாகக் கொண்ட காலவதியான முதலாளித்துவ சமூக உறவுகளும் உற்பத்திச் சக்திகளுடன் மோதிக்கொள்ளும் அடிப்படையான முரண்பாடுகளினுலேயே தோன்றியுள்ளன. இவை, வர்த்தக வீழ்ச்சியினதும் யுத்தத்தினதும் போக்குக்கள் அதிகரிக்கும் விதத்தில் வெளிப்பாடாகத் தொடங்கி உள்ளன.


நிகரகுவா போன்ற நாடுகளுக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியம் நடாத்தும் இராணுவ ஆத்திரமூட்டல்களானது சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி மற்றும் ஏகாதிபத்திய வங்கிகளின் குரல்வளை நெரிக்கும் உத்தரவுகளுக்கு எதிராக வெடிக்கும் தொழிலாள வர்க்கப் போராட்டங்களை நசுக்கும் அவசியத்துடன் இணைந்துள்ளது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் நாற்றம் எடுத்து, தமது உலக ஆதிபத்தியத்தை இழந்து போயுள்ள அமெரிக்க ஆளும் வர்க்கம் இன்றைய நெருக்கடியின் மத்தியில் இராணுவ தலையீடுகளின் மூலம் திரும்பவும் அந்த ஆதிக்கத்தைக் கைப்பற்றிக்கொள்ள முயல்கிறது. ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்கள் இன்று உக்கிரம் அடையும் உலக நெருக்கடியின் சூழ்நிலையின் காரணமாக உலக யுத்தத்துக்கான திசையில் பயணம் செய்யும் போக்கினை இவ்வபிவிருத்திகள் காட்டுகின்றன.

ஏகாதிபத்திய நாடுகளில் வர்த்தக யுத்தம், பொருளாதார வீழ்ச்சி, கடன் கட்டுப்பாடு, இராணுவ மயமாக்கம் என்பன ஏகாதிபத்திய அமைப்பின் பிடியில் உள்ள இலங்கை போன்ற அரைக் காலனித்துவ நாடுகளின் முதலாளி வர்க்கத்தின் நெருக்கடியை மோசமான விதத்தில் உக்கிரம் காணச் செய்துள்ளது.

(3ம் பக்க

பொருட்களை விநியோகம் செ
யும், ஏதேனும் சுயாதீனமா
கைத்தொழிலை அபிவிருத்
செய்ய இலாயக்கற்ற ஏகா
பத்திய சார்பு கும்பலாகே
விளங்கியது. நாட்டினுள் நி
வப்பட்ட கைத்தொழில்க
ஏதும் இருப்பின் அவை ப
ளுட்டுக் கம்பனிகளின் பாகங்
ளாக விளங்கின; இல்லையே
வெளிநாட்டு கடனில் தங்
இருந்தன.

உலக முதலாளித்துவ
தின் அபிவிருத்தியின் பெ
பேறுக உருவான 'தேசிய மு
லாளி வர்க்கம்' அந்த ஏகா
பத்தில் தங்கி உள்ளது. இ



புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து ஆட்சியை தம் கைக்கு மாற்றிக் கொண்ட இலங்கையின் முதலாளி வர்க்கம், ஜனநாயக அடிப்படைக் கொள்கைகளை சிரச்சேதம் செய்த ஒரு அரசினைத் திணித்தது. தமிழ் தேசிய இனப் பிரச்சினை, விவசாயப் பிரச்சினையைத் தீர்ப்பது, ஏகாதிபத்திய பிடியை உடைப்பது போன்ற முதலாளித்துவ ஜனநாயக புரட்சியின் பணிகள் சிரச்சேதம் செய்யப்பட்டதனால் இந்த முதலாளித்துவ ஆட்சி உற்பத்திச் சக்திகளுக்கும், தொழிலாள வர்க்கத்துக்கும், ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்துச்கும் ஏழை விவசாயிகளுக்கும் மரண வீடாகியது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் சுதந்திரம் எனப்பட்டதைப் பெற்றுக் கொண்ட ஏனைய காலனித்துவ நாடுகளைப் போலவே இலங்கையிலும் முதலாளி வர்க்கம் ஏகாதிபத்திய நாடுகளுக்கு மூலப்

நகரத்தில் தொழிலாள வ
கத்தை சுரண்டுவதோடு கி
மப் புறங்களில் ஏழை விவச
களை உறிஞ்சுகின்றது. அ
பாஞ்சாலை, திருச் சபை
முதலான நிறுவனங்கள்
றும் ஜாதி முறை முதலா
நிலமானித்துவ உறவுகளுட
இணைந்து கொண்டுள்ள
தமிழ் தேசிய சிறுபான்மைய
ரை நசுக்குவதோடு தமி
விரோத இனவாதத்
தொழிலாளர் வர்க்கத்தை
பிளவுபடுத்தவும் இனவா
தின் மூலம் ஏழை விவச
களை தூண்டி விடவும் கே
மாக பயன்படுத்துகின்றது.

சமசமாஜ, கம்யூனிச,
சமசமாஜ தலைவர்களால் ப
பூசை செய்யப்படும் சிங்
முதலாளி வர்க்கம் கடந்த
ஆண்டு கால ஆட்சிக் கா
பூராவும் இடைக்கிடை
இவர்களின் முண்டுகோலுட
தொழிலாள வர்க்கத்தை
ஏழை விவசாயிகளையும்

## ''தொழிலாளர் பாதை''
### சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட
''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்:

1 மாதம் — ரூ. 4.00 3 மாதம் — ரூ. 12.00
6 மாதம் — ரூ. 24.00 1 வருடம் — ரூ. 48.00

பெயர் :..........................................................

முகவரி :..........................................................

சந்தாக் காலம் :.................. ரூ: ......... சதம் ......

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது
காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்
திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய
முகவரி:

நிர்வாகி,

''தொழிலாளர் பாதை''
இல. 90, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10.

# ...ளியை தகர்த்தெறி!...

(...கத் தொடர்ச்சி)


செய்
ான
த்தி
காதி
கவே
நிறு
கள்
பன்
ங்க
யல்
ங்கி

லத்
பறு
முத
ாதி
இது

நிலைமைக்குள்ளாக்கியது. உலக முதலாளித்துவத்தின் கூட்டு, அசமத்துவ வளர்ச்சினுல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள இலங்கையின் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஸ்தம்பிதத்தையும், பின்னடிப்பையும், அழிவையும் நிறுத்துவதற்கு இலங்கையின் முதலாளி வர்க்கத்தின் எந்தவொரு பகுதியினருக்கும் வல்லமை கிடையாது.

இலங்கை முதலாளித்துவ அமைப்பில் 'தேசிய புனருத்தாரணம்' ஏற்படுத்துவது சம்பந்தமாக சமசமாக-கம்யூனிச நவ சமசமாஜ தலைவர்கள் முன் வைக்கும் கருத்துக்கள் இந்நிலை ஒரு புறமும் ஏகாதிபத்திய வங்கிகளுக்கும் பன்னாட்டு கம்பனிகளுக்கும் மூர்க்கமான சுரண்டல நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டும், கடன்களை திருப்பிச் செலுத்தும் பொருட்டும் செய்யும் நெருக்குவாரங்கள் மறுபுறத்திலுமாக இலங்கையின் ஆளும் வர்க்கம் உக்கிரமடையும் உலக நெருக்கடியுள் மூழ்கிப் போயுள்ளது.

தமது பொருளாதார, அரசியல் வங்குரோத்தினை அடைக்கும் பொருட்டு இலங்கை முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியவாதிகளிடம் இருநது திரும்பத் திரும்ப அதிகரித்து வந்த கடன் வாங்கல்கள், யூ.என.பி. அரசாங்கத்தின் ஆட்



...தின் மே தின ஊர்வலம் — 1988

ர்க்
ரா
ாயி
ங்கு
கள்
மற்
ான
ன்
து.
ின
ர்
தை
நப்
த்
ாயி
பல

வ
ாத
ள
40
ம்
யே
ன்
ம
ந்

மையில் வரலாற்று எதிர்ப்புமிக்கவை. உலக முதலாளித்துவத்தினுள் இலங்கை முதலாளித்துவம் வகிக்கும் ஸ்தானத்தினுலும், அந்த உலக முதலாளித்துவத்தின் வரலாற்று முரண்பாடுகளினுலும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள இலங்கையின் முதலாளித்துவத்தின் நெருக்கடியைத் தீர்க்கும் 'தேசிய பாதைகள்' இல்லை. அவர்களின் இந்த 'தேசிய பாதை' யானது தொழிலாள வர்க்கத்தை 'தேசிய முதலாளி வர்க்கத்துக்கு' அடிமைப் படுத்தி அதன் மூலம் ஏகாதிபத்தியத்தினதும் தேசிய முதலாளி வர்க்கத்தினதும் எதிர்ப்புரட்சி வேலைத் திட்டத்துக்கு பலியிடும் வேலைத் தட்டமாக விளங்குகின்றது.

இன்றைய கடன் வெட்டுக்கள், ஏற்றுமதி பொருட்களுக்களுக்கான சந்தைகளின் வீழ்ச்சி, விலை வீழ்ச்சி, உற்பத்திச் செலவு அதிகரிப்பு ஆதயன

சிக் காலத்தில் 550 கோடி ரூபாய்களில் இருந்து 1987 ஜனவரியில் 7009 கோடி ரூபாய்களாக - 15 மடங்கால் அதிகரித்துள்ளது. நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் நூற்றுக்கு 28 வீதம் இந்த வெளிநாட்டுக் கடன்களின் பேரிலான வட்டியைச் செலுத்தும் பொருட்டு ஒதுக்க நேரிட்டுள்ளது. உத்தியோக பூர்வமான பணவீக்கம் நூற்றுக்கு 13.2 வீதம். வாழ்க்கைச் செலவுப் புள்ளி யூ.என்.பி. ஆட்சிச் காலத்தில் மட்டும் 203ல் இருந்து 714 புள்ளியாக அதிகரித்துள்ளது. நாட்டில் தொழில் புரியக் கூடிய சனத் தொகையில் நூற்றுககு 25 வீதமானேர் வேலையின்மையில் மூழ்கிப் போயுள்ளனர். ரூபா 300க்கு குறைந்த மாதச் சம்பளம் பெறும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் முழு ஜனத் தொகையில் நூற்றுக்கு 60% எனக் கணக்கடப்பட்டுள்ளது. படிப்பறிவின்மை நூற்றுக்கு 13% வரை உயர்ந்துள்ளது. போஷாக்கின்மையும், தொற்று நோய்களும் பயங்கரமான கட்டத்தை அடைந்துள்ளன.

இந்த அழிவுகளிற்கு மத்தியில் இவற்றை மேலும் மேலும் உக்கிரமாக்கும் தாக்குதல்களை சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் தொடுத்துள்ளது. ரூபாவை மதிப்பிறக்கம் செய்யவும், அரசாங்க, கூட்டுத்தாபன துறைகளை தனியார்மயப்படுத்தவும் மக்களின் நுகர்வினை குறைக்கவும், கல்வி, சுகாதாரம், சேமநல சேவைகளை ஒழிக்கவும் கட்டளையிட்டுள்ளது. இந்த வேலைத் திட்டங்களின் மூலம் தொழிலாள வர்க்கத்தினதும் ஏழைகளதும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களதும் தொழில்களுக்கும் வாழ்க்கைதரத்துக்கும், ஜனநாயக உரிமைகளுக்கும் தாக்குதல் தொடுத்துள்ளது

வடக்கு - கிழக்கு மாகாணங்களை இந்திய இராணுவ பலத்தினுல் ஒடுக்கும் அதே வேளையில் யூ.என்.பி. அரசாங்கம் மேற் சொன்ன வேலைத்திட்டத்தை அமுல் செய்யும் பொருட்டு தொழிலாள வர்க்கத்துக்கும் கிராமப்புற ஏழை மக்களுக்கும் எதிராக பொலிஸ் இராணுவ தாக்குதல் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியவாதிகளதும் 'தேசிய' முதலாளி வர்க்கத்தினதும் நலன்களை காக்கும் பொருட்டு பொலிஸ், இராணுவ சர்வாதிகாரத்தைத திணிப்பதைவிட வேறு 'மாறறு வழி' யூ.என்.பி சிறீலங்கா சுதந்திரக் கட்சி முதலாளிகளுக்கு இல்லை.

சமசமாஜ—கம்யூனிச—நவ சமசமாஜ தலைவர்கள் 'சர்வாதிகார' 'யுத்த ஆட்சி' பற்றி குற்றஞ் சாட்டுகிறுர்கள். இவர்கள் மற்றுமோர் முதலாளித்துவ மக்கள் முன்னணி அரசாங்கத்தினை ஆட்சிக்கு கொணர்வதன் மூலம் இவற்றை தவிர்த்து விட லாம் எனக் கூறியபடியே இங்ஙனம் செய்கின்றனர். இவர்கள் முதலாளித்துவத்தினுள் சர்வாதிகாரததை நீக்கிவிடுவதற்கான பாதை உள்ளது என்ற கையாலாகாத்தனமான நப்பாசைகளை விதைக்கிறுர்கள் 'முதலாளித்துவ சாவாதிகாரத்தினை, விடச 'சிறந்தது எனவும்' ஆதலால் முதலாளித்துவ ஜனநாயகத்தைக் காக்க தொழிலாள வர்க்கம் செயற்பட வேண்டும் எனவும் இத் தலைமைகள் கூறிக் கொள்கிறுர்கள். 'சர்வாதிகார', 'யுத்த ஆட்சி' ஊடாக இராணுவ சர்வாதிகாரத்துக்குச் செல்லும் மூலம் முதலாளித்துவ வர்க்க ஆட்சியே.

''முதலாளித்துவ ஜனநாயகத்தை'' தூக்கிப் பிடித்து தொழிலாள வர்க்கத்தினை அதற்குக் கட்டிப்போட முயன்ற கவுட்ஸ்கி உள்ளடங்கலான துரோகிகளுக்கு எதிராக முதலாளித்துவ ஜனநாயகத்துள் முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் ஆட்சி நிலவுவதாகவும் லெனின் சுட்டிக்காட்டினர்:

''யுத்தத்துக்கு முன்னரும் கூட இந்த 'பரிசுத்த ஜனநாயகம்' முதலாளித்துவத்தின் கீழ் நிசமாக என்னவென்பதை 19ம் 20ம் நூற்றுண்டுகளின் வரலாறு வெளிக் காட்டியுள்ளது. 'பரிசுத்த ஜனநாயகம்' நன்கு வளர்ச்சி கண்டு விளங்கும் நிலையில் வர்க்கப் போராட்டம் நன்கு உறுதியான, நன்கு உக்கிரமான, நன்கு பலமானதாகுவதாகவும் முதலாளித்துவ ஒடுக்கு முறையும், முதலாளித்துவ சர்வாதிகாரமும் 'பரிசுத்தமாக்கப்' படுவதாகவும் மார்க்சிசம் எப்போதும் குறிப்பிட்டுள்ளது. குடியரசு பிரான்சின் டிபஸ் வழக்கும் சுதந்திர ஜனநாயக அமெரிக்க குடியரசினுள் முதலாளிகளால ஆயுதபாணியாக்கப்பட்ட கைக்கூலி குண்டர்களால் வேலை நிறுத்தக்காரர்கள் படுகொலை செய்யப்பட்டமையும் இதற்குச் சமானமான ஆயிரம் விடயங்களும் முதலாளித்துவம் பயனற்ற முறையில் ஒழித்துவிட முயலும் உண்மைகளாகும். அதாவது, மிகவும ஜனநாயகமயமான குடியரசினுள் பயங்கரமும், முதலாளித்துவ சர்வாதிகாரமும் நிலவுகின்றதையும் மூலதனத்தின் ஆட்சி இழகுகின்றது என சுரண்டப்படுவோர் நினைக்கும் ஒவ்வொரு தருணத்திலும் அது அப்பட்டமாக காட்சி தருவதையும் காட்டுகின்றது''.
(லெனின் நாற்தொகுதி-22-பக்கம்-461)

முன்னேறுத 'முதலாளித்துவ ஜனநாயக' நாடுகளுக்கும் இன்று இது பொருந்தும். தொழிலாள வர்க்கத்தின் பணி, தம்மைச் சுரண்டும் பொருட்டு கொடிய சர்வாதிகாரத்தை நடாத்துவது 'முதலாளித்துவ ஜனநாயக' ஆட்சி வடிவினுள்ளா இல்லையேல் அப்பட்டமான சர்வாதிகார ஆட்சி வடிவினுள்ளா என்பதை தீர்மானம் செய்வது முதலாளி வர்க்கமேயாகும். அதனை தொழிலாள வர்க்கத்தினுல் தீர்மானிக்க முடியாது. அதை தீர்மானம் செய்ய தொழிற்படுவோர் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான புரட்சிகர தொழிற்பாட்டையும் வேலைத் திட்டத்தையும் முதலாளி வர்க்கத்துக்கு அடிமைப் படுத்துகின்றாகள். சமசமாஜ — கம்யூனிச — நவ சமசமாஜ தலைவர்கள் முதலாளித்துவ ஜனநாயகத்துடன் தொழிலாள வர்க்கத்தை கட்டிப்போட சேவலமான முறையில் முயற்சி செய்கையில், இலங்கை முதலாளி வர்க்கம் அப்பட்டமான சர்வாதிகார திசையில் அநேக நடவடிக்கை எடுத்துள்ளது.

இத் தலைவர்கள் முழுமனே அங்கீகரித்துள்ள இந்திய— இலங்கை ஒப்பந்தம் இதில் முக்கியமானது இதன் மூலம் வடக்கு கிழக்கில் ஏற்கனவே சர்வாதிகாரம் தயாராகியுள்ளது. மறுபுறத்தில் யூ.என்.பி அரசாங்கம் இராணுவ, பொலிஸ் படை அணிகளை, ஊர்க்காவல் படைகள், அதிரப் படைகள், போன்ற இராணுவப் படைகளையும், பச்சைப் புலிகள் போன்ற கொலைகார கும்பல்களையும் தொழிலாள வர்க்கத்துக்கும், ஏழை மக்களுக்கும் எதிராகப் பலப் படுத்தியுள்ளது.

தொழிலாளவர்க்க அரசியல் கட்சிகள் தொழிற் சங்கங்கள், போராளிகள், பத்திரிகைகள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் யூ என். பீ. அரசாங்கத்தின் சர்வாதிகார சட்ட, பொலிஸ், இராணுவ குண்டர் தாக்குதல் மிரட்டல் தொடுக்கப்பட்டுள்ளது. தொழிலாள வர்க்க அமைப்புகளுக்கு ''பங்கரவாத'' முத்திரை குத்தி அடக்கிவிடும் முயற்சிகள் பல முறை யூ என் பீ. அரசாங்கத்தின் கீழ் மேறகொள்ளப்பட்டன. 1980 வேலை நிறுத்தத்தினை தோற்கடித்து தொழிற் சங்க அலுவலகங்களை சீலிட்டதோடு தற்போது ''பாதுகாப்பு காரணங்களுக்காக'' தொழிற் சங்கங்களை மூடிவிடுவது என்ற வேட்டை நடத்தப்படுகிறது. வங்கி ஊழியா, தாத்கள் பிரசாரத்தில் இத் தொழிற்சங்கங்களை தடைசெய்து தலைவர்களை கைது செய்யும் மிரட்டல் தொடுக்கப்பட்டது. தொழிற் சங்க தலைமைகளை அரசாங்க ஏஜந்துகளாக மாற்றிவிட செயறபடும அதே சமயம் தொழிற் சங்கங்களை அரச அடக்குமுறைக்கு கட்டுப்படுத்தும் பொலிஸ்—இராணுவ ஆட்சிக்கான தயாரிப்பே நிச்சயமான நடவடிக்கையாகும்.

முதலாளித்துவ சர்வாதிகாரத்திற்கு எதிரான தொழிலாள வர்க்கத்திற்குள்ள ஒரே ஒரு மாற்று திட்டம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்காக போராடுவதே. அதன் பொருட்டு தொழிலாள வர்க்கத்தின் சுயாதீன புரட்சிகர செயற் திட்டத்தின் மீது எழுச்சி காண்பதை தவிர்ந்த வேறெந்த இடை நடுவழியெதுவும் தொழிலாள வர்க்கத்திற்கு இல்லை.

தற்போதைக்கு முதலாளித்துவ அமைப்பினை கட்டிக் காக்கும் வேலைத்திட்டத்தன் மூலமும் எதிர்காலத்தில் 'நீண்ட' பயணத்தின் மூலம் சோசலிசத்தை நோக்கி செல்லும் வெறும் வாக்குறுதிகளையும் கொண்ட இரண்டு கட்ட ஸ்டாலினிச மக்கள் முன்னணி வேலைத்திட்டம் வரலாற்று எதிர்ப்புரட்சி நடவடிக்கைக்காக திரும்பவும் இலங்கையின்

★ 6ம் பக்கம் பார்க்கவும்

# முதலாளித்துவ மக்கள் முன்னணியை . . .

[5 ம் பக்கத் தொடர்ச்சி]

சமசமாஜ—கம்யூனிச—நவ சமசமாஜ தலைவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. இது முதலாளி வர்க்கத்துக்கு தொழிலாள வர்க்கத்தைக் கட்டிப் போட்டு அதனை புரட்சிகரப் பணியில் இருந்து தடுத்து. ஸ்தம்பிதம் அடையச் செய்ய முதலாளி வர்க்கத்தின் சார்பில் செய்"/ம் தலையீடாகும். இத் தலைவர்கள், எதிர்காலத்தில் தொழிலாளர்கள் முதலாளிகளின் சொத்து உரிமையை சவாலுக்குள்ளாக்கும் புரட்சிகரப் போராட்டங்களில் ஈடுபடும் வேளையில் அவற்றை 'தீவிரவாத' நடவடிக்கைகள் எனத் தாக்கி முதலாளித்துவ சொத்து முறையை காக்கும் பொருட்டு தலையிடலாம். இன்று இனவாத ஒடுக்கு முறையில் இருந்து விடுபடும் பொருட்டு தமிழ் தேசிய இனம் தொடுக்கும் போராட்டத்தை நசுக்கிவிட யூ.என்.பி. அரசாங்கத்துக்கும் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கும் ஒத்துழைப்பு வழங்கி வரும் இவர்கள் நாளைய தினம் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராகவும் அங்ஙனமே தலையிடுவர்,

ாம் இதுவரை காலமும் மக்கள் முன்னணி அமைத்து வந்த முதலாளித்துக் கட்சிகளைப் போலன்றி சிறீலங்கா மக்கள் கட்சி என்ற பேரில் புதிய கட்சி கிடைத்துள்ளதாகக் காட்டி தொழிலாள வர்க்கத்தின் கண்களில் மண்ணை வாரி இறைக்க சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ தலைவர்கள் துடிக்கிறார்கள். 'இடது' கோலம் பூண்ட இந்த முதலாளித்துவக் கட்சி, முதலாளித்துவத்தின் முழு அங்கீகாரத்தைப் பெறுது போயினும் இந்திய—இலங்கை உடன்படிக்கைகளுக்கும் ஆக்கிரமிப்புக்கும் ஆதரவு வழங்கியதன் மூலமும், தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியுரிமை வழங்குவதை எதிர்த்ததன் மூலமும் ஜயவர்தன—காந்தி அரசாங்கங்களுக்கு முக்கியமான சேவையை வழங்கியது. சிறீலங்கா மக்கள் கட்சியானது, சமசமாஜ—கம்யூனிச—நவ சமசமாஜ மற்றும் கேவலம் தலைமைகளைக் கொண்டு தொழிலாள வர்க்கத்தின் வர்க்க சுயாதீனத்தை நாசமாக்கும் பொருட்டு முதலாளி வர்க்கத்தினால் தயார் செய்யப்பட்டு களத்தில் இறக்கப்பட்டுள்ள புதிய முதலாளித்துவக் கட்சியாகும்.

மக்கள் முன்னணியை பலப்படுத்தி, தொழிலாள வர்க்கத்தை அதற்கு அடிமைப் படுத்தும் பொருட்டு இடதுசாரி—வலதுசாரி மத்தியவாதிகள் இருசாரரும் சமசமாஜ—கம்யூனிச தலைவர்களின் துரோக ஆலவட்டங்களாக வெளிப்பட்டுள்ளனர். மக்கள் முன்னணியின் பங்காளர்களான நவ சமசமாஜ மத்தியவாதிகள் அதனை 'ஐக்கிய முன்னணி' என அழைக்கின்றனர். பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கட்சி, சமசமாஜ—கம்யூனிஸ் கட்சிகளின் தலைவர்களைப் போன்ற துரோகிகளை அம்பலப்படுத்தவும், வர்க்க எதிரிக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை வழி நடாத்தம் ஏற்படுத்தும் 'ஐக்கிய முன்னணி' என்ற உபாய நடவடிக்கையினை நவ சமசமாஜ மத்தியவாதிகள் முதலாளித்துவ கட்சிகள் தொழிலாள வர்க்கத்தின் உள்ளேயுள்ள சந்தர்ப்பவாதிகளுடன் உருவாக்கிக் கொண்டுள்ள கூட்டுடன் சமப்படுத்தும் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நவ சமசமாஜ மத்தியவாதிகள் அவர்களின் 'ஹரய' பத்திரிகையில் பின்வருமாறு எழுதினர்: ''மேற் குறிப்பிட்ட விதத்தில் உடன்படிக்கை சம்பந்தமாக வேறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டுள்ள போதிலும் செயல்படும் அவசியத்தின் அடிப்படையில் பெரும்பான்மையினரின் கருத்துக்களைக் கொண்ட அறிக்கைகளுக்கு இணங்குதல் ஐக்கிய முன்னணியின் தொழிற்பாட்டுக்கு அவசியமான ஒருமைப் பாட்டை வழங்குதலாகும். ஐக்கிய முன்னணியில் தொழிற்படுகையில் அத்தகைய தியாகங்களை செய்ய நேரிடும் என்பதை புரிந்து கொள்ளுதல் சிரமம் அல்ல'' (''ஹரய'' மார்ச் 11)

இந்த மத்தியவாதிகளுக்கு தமிழ் தேசிய இனத்தை இந்திய—இலங்கை உடன்படிக்கைக்கும், ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கும் பலி கொடுப்பது ஒரு 'தியாகமாகும்'. அதன் மூலம் தமிழ் தேசிய இனத்தில் இருந்தும் ஏழை விவசாயிகளில் இருந்தும் தொழிலாள வர்க்கத்தை தனிமைப்படுத்தி எதிர்ப் புரட்சியாளர்களுக்கு பலிகொடுப்பதானது, நவ சமசமாஜிஸ்டுகள் கட்டிக் காக்க சபதம் பூண்டுள்ள முதலாளித்துவ அமைப்புடன் ஒப்பிடும் போது சிறு ''தியாகமே''.

இந்திய—இலங்கை உடன்படிக்கையையும், இந்திய இராணுவ ஆக்கிரமிப்பையும் ஆதரிக்கும் அரசாங்க லிகிதர் சேவை சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கங்களின் தலைவர்கள் மக்கள் முன்னணி தலைவர்களின் பின்புறத்தில் கை வைத்துள்ளனர். 'இடது' முதலாளித்துவ சிறீலங்கா மக்கள் கட்சியுடன் இணைந்தும், அதன் தலைவர்களுடன் மேடைகளில் ஏறியும் அவர்களை முற்போக்காளர்களாகக் காட்டியும் மக்கள் முன்னணியை பலப்படுத்த கை கொடுத்தனர்.

மக்கள் முன்னணியை தொழிலாளர் வர்க்கத்தினுள் இறக்குகையில் கடந்த சில வருடங்களாக தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமைக்கு ஆதரவளிப்பதாயும், முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக போராடுவதாயும் வாயடித்து வந்த இந்த இடது, வலதுசாரி மத்தியவாத தலைவர்களின் ஆதரவு, துரோகிகளாக அணி திரண்டுள்ள சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுக்கு இன்று அவசியமாகும்.

மக்கள் முன்னணியை உடனடியாக விஸ்தரிக்கும் பொருட்டு வேறும் சில துரோகிகள் குப்பலும் புதிதாக சேர்ந்து கொண்டுள்ளது காந்தி—ஜயவர்தன உடன்படிக்கையின் எதிரில் அடிபணிந்து அந்த உடன்படிக்கையையும் ஆக்கிரமிப்பையும் அங்கீகரித்த தமிழ் குட்டி முதலாளித்துவ ஈ.பீ.ஆர்.எல்.எவ், புளொட் இயக்கங்களின் தலைவர்களே இவர்கள். ''ஜனநாயக தொழிற்பாட்டில் இணைதல்'' 'வடக்கு தெற்கு இடதுசாரி ஐக்கியம்' என்பன போன்ற மோசடியான சுலோகங்கள் பொறிக்கப்பட்டதும், காட்டிக்கொடுக்கப்பட்ட தமிழ் தேசிய இனத்தின் இரத்தக் கறை படிந்த கொடியை உயர்த்திப் பிடித்துள்ளதுமான இத் துரோகிகள்' தமிழ் தேசிய இனத்தை மக்கள் முன்னணிக்குள் தள்ளும் கெந்தராத்தினை பொறுப் பேற்றுள்ளனர்

## புரட்சிகர வேலைத் திட்டம்

தமிழினத்தை இந்திய இராணுவ சர்வாதிகாரத்திற்கு கீழ்ப்படுத்தியும், தென் புறத்தில் சர்வாதிகாரத்திற்கு தயாராகும யூ.என்.பீ. அரசாங்கம் உட்பட்ட முதலாளித்துவம் நடத்தும் தயாரிப்பை, அதன் மூலவேராக நிலவும் நெருக்கடிக்கு இலக்காகியுள்ள முதலாளித்துவ அமைப்பினையும் அவ்வர்க்க ஆட்சியையும் அகற்ற தமிழ் தேசியத்தையும் கிராமப்புற வறிய மக்களினதும் தலைமையாக எழுச்சியுற்று ஆட்சியை கைப்பற்றும் சிறீலங்கா, தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தினால் மட்டுமே தோற்கடிக்க முடியும்

தொழில், வாழ்க்கைத் தரம், ஏனைய அடிப்படை சனநாயக உரிமைகளுக்கு தொடுக்கப்படும் தாக்குதலை தகர்க்க ஏகாதிபத்திய, தேசி
தலாளித்துவ சொத்துடைமையை தொழிலாள வர்க்க ஆட்சியின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச வேலைத் திட்டத்திற்காக போராடுவது, அத்தியாவசியமாக விளங்குகிறது. எனினும் இச் சோசலிச வேலைத் திட்டங்களுக்காகப் போராடுவதற்கு சமசமாஜ—கம்யூனிச—நல சமசமாஜ தலைமைகள் சிபார்சு செய்யும் மக்கள் முன்னணியில் கட்டுண்ட தொழிலாள வர்க்கத்தால் முடியாது. இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவளிக்கும் வேலைத் திட்டத்தினால் கட்டுண்ட தொழிலாள வர்க்கத்தினால் இதற்கு போராட முடியாது. இந்திய இலங்கை ஆக்கிரமிப்பு படையை வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றவும் தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணயம் உரிமையை நிலை நாட்டவும் ஈடுபடும் வேலைத் திட்டத்தில் மீது தொழிலாள வர்க்கம் எழுச்சியுற வேண்டும். அங்ஙனமே தொழிலாள வர்க்கம் கிராமப்புற விவசாய மக்களின் பிரச்சினையை தீர்ப்பது சம்பந்தமான வேலைத்திட்டத்தினூடாக அவர்களது ஆதரவை தம்மால் அணி திரட்டிக் கொள்ளவேண்டும்,

ஏகாதிபத்திய பிடியையும் ஏஜந்தான முதலாளித்துவ பிற்போக்கு ஆட்சியையும் புரட்டியடிக்க இந்தியா, சிறிலங்கா தமிழமும் உள்ளடங்கலான முழு இந்திய உப கண்டத்திலும் தொழிலாள வர்க்கத்தின் ஒருமித்த போராட்டத்தேவையை இந்திய இலங்கை ஒப்பந்தமும், இந்திய படை ஆக்கிரமிப்பும் மிக தௌிவாக காட்டியுள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தையும் இந்திய ஆக்கிரமிப்புக்கும் ஆளும் வர்க்கம் வழங்கும் ஆதரவையும், ஏகாதிபத்திய ஆளும் வர்க்கத்தினால் இந்த முதலாளிகள் சர்வாதிகாரத்தை நோக்கி அணி திரள்வதையும் மிக நன்றாக நிலைநாட்ட சிறிலங்காவினதும் தமிழிழத்தினதும் தொழிலாள வர்க்கம் ஒரே ஒரு அனைத்துலக பொது எதிரிக்கெதிராக நடைமுறையில் எதிர்கொள்ள வேண்டும். தம் நாட்டினுள் அனைத்துலக பிற்போக்கின் தேசிய ஏஜந்து ஆட்சியை புரட்டியடிப்பதற்காக நடத்தும் போராட்டத்தால் சிறிலங்காவினதும் தமிழீழத்தினதும் தொழிலாள வர்க்கம் அனைத்துலக தொழிலாளர்களுடன பொதுப் போராட்டத்திற்கான வர்க்க தோழமையை கட்டியெழுப்ப வேண்டும்.

சமசமாஜ—கம்யூனிச நவ சமசமாஜ தலைமைகள் தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவத்திற்கு கட்டிப் போடுவதற்காக சமாடபித்துள்ள வேலைத் திட்டங்களுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைக் கிளை சமாப்பித்த பாட்டாளி வர்க்க சுயாதீன புரட்சிகர வேலைத் திட்டத்தின் மீது அணி திரளுமாறு தமிழிழத்தினதும் சிறி லங்காவினதும் பாட்டாளி வர்க்கத்தை வேண்டுகிறோம். ஏகாதிபத்திய பிடியை ஒழிக்க:—

- சர்வதேச நாணய நிதி, உலக வங்கி ஏனைய ஏகாதிபத்திய வங்கிகளுடன் ஏற்படுத்தியுள்ள ஒப்பந்தமும் செலுத்த வேண்டியுள்ள கடன் வட்டியை மீண்டும் செலுத்துவதை நிராகரித்தல்
- ஏகாதிபத்திய சொத்துக்களை தொழிலாள ஆட்சியின் கீழ் தேசியமயமாக்கல்.
- ஐ. நா. மற்றும் ஏகாதிபத்திய நிறுவனங்களிலிருந்து வெளியேறுதல்.
- வெளிநாட்டு ஏற்றுமதி—இறக்குமதி வர்த்தகத்தை அரசுடமையாக்கல்.

தமிழ் தேசிய பிரச்சனையை தீர்க்கவும் ஏனைய சனநாயக உரிமைகளை நிறைவேற்ற:—

- தமிழ் தேசியத்தின் சுயநிர்ணய உரிமையான தமிழீழத்திற்கான உரிமையை நிலை நாட்டல்,
- சுல தோட்ட தொழிலாளருக்கும் குடியுரிமை வழங்கலும் அவர்களை அடக்க விதிக்கப்பட்ட சகல ஒப்பந்தங்களையும் அகற்றல்.
- பல்வேறுபட்ட மதக் குழுக்களுக்கும் சமவுரிமை அரசின் மத சமத்துவம்,

★ 7ம் பக்கம் பார்க்க

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர் :————————————————

முகவரி :————————————————

கழகத்தைப் பற்றி எனக்கு மேலும் விபரங்கள் வேண்டும் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

இல. 90, 1 – வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10.

# முதலாளித்துவ மக்கள் முன்னணியை...

( 6ம் பக்கத் தொடர்ச்சி )

அரசு, கல்வி, சம்பந்தமாக மதசார்பற்ற முறையில் விவசாயிகள் பிரச்சினையை தீர்க்க

- பயிரிடும் விவசாயிக்கு காணியுரிமையை நிலை நாட்டல்.
- விவசாயிகள் திருப்பி வழங்க வேண்டிய கடன் வட்டியை வெட்டி விடல்: பரந்த அரச கடன் முறையை ஏற்படுத்தல்.
- உற்பத்திக்கு தேவையானதும் உற்பத்தியை சுயமாக பெறவும் விற்கவும், கிராமப்புற விவசாயிகளை ஆட்டிப் படைக்குக் முதலாளித்துவ கம்பெனிகளையும் வியாபாரிகளையும் அகற்றல். தொழிலாளரதும் விவசாயிகளதும் கூட்டுறவு முறையை நிலைநாட்டல்.
- நீர் வரி, ஏனைய வரிகளை அகற்றுதல்,
- சட்ட நிறைவேற்று சபை கூட்டல்.

இந்த சனநாயக செயற்றிட்டத்தை செயற்படுத்த தொழிலாள வர்க்கத்திற்கு தமிழினத்தினதும் விவசாயிகளதும் ஆதரவை தம்பால் வென்றெடுத்து சோவியத் சபைகளினை அடிப்படையாக கொண்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை கட்டியெழுப்புவதாலேயே முடியும். அங்ஙனமே அத்தகைய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு சனநாயக செயற்றிட்டத்தை செயற்படுத்துவதோடு இடைநிறுத்தம் செய்ய முடியாது.

உலக முதலாளித்துவ நெருக்கடியால் உக்கிரமாகும் தாக்குதல்களை தோற்கடிக்க தொழிலாள வர்க்கம், தனியார் துறையிலும் சகல அடிப்படை கைத்தொழில் தோட்ட வங்கி, ஏனைய வியாபாரங்கள் தமது ஆட்சியின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச வேலைத்திட்டத்தை செயற்படுத்தமூன் செய்யவேண்டும்.

இச் சோ லிச பொறுப்பை நிறைவேற்ற விவசாய மக்களை ஆட்டிப்படைக்கும் முதலாளித்துவ வியாபாரிகளது பலத்தை தகர்ப்பதும், தமிழ் தேசியத்தின் விடுதலை போராட்டத்திற்கெதிரான இந்திய–இலங்கை முதலாளித்துவங்களினதும் அவற்றுடன் சதி செய்யும் வலதுசாரி, இடதுசாரி தமிழ் முதலாளிகளது பலத்தை தகர்ப்பதும் மிக இன்றியமையாதது:

பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை கட்டி எழுப்ப வேண்டுமாயின் தொழிலாள வர்க்கம் தமிழ் தேசியத்தையும் வறிய விவசாயிகளையும் தம்மை சூழ ஒருங்கிணைத்தபடி முதலாளித்துவ அமைப்பினை பேணும் அடக்குமுறை இயந்திரமான முதலாளித்துவ அரசினை தகர்ப்பதற்காக சுயபலக்கோட்டையை நிறுவிய வண்ணம் போராட வேண்டும்: யூ.என்.பீ. அரசாங்கமானது கடந்த பத்தாண்டுகளுள் தொழிலாள வர்க்கத்திற்கும், தமிழ் தேசியத்திற்கும் ஒடுக்கப்பட்ட விவசாயிகளுக்கும் எதிராக அரச இயந்திரத்தை வலுப்படுத்தியுள்ளது மட்டுமல்ம அரை–இராணுவ படைகளையும் ''பச்சைப் புலி'' எனும் பெயருடைய மரணப்படை கும்பலையும் கட்டியெழுப்பியுள்ளது. அங்ஙனமே சி.ல.சு.சு முதலாளிகளின் பின்னல் திரண்டுள்ள ம.வி.மு.யின் சுய குண்டர் படை தொழிலாள ஒடுக்கப்பட்ட மக்களது புரட்சிகர போராட்டங்களுக்கெதிராக கட்டவிழ்த்து விடப்படம் முதலாளித்துவ எதிர்ப் புரட்சியின் படையாக செயற்படுத்தப்படும் போக்கில் செல்கிறது.

இத்தகைய எதிர்ப் புரட்சிகர ஆயுதபாணி படைச்சக்திகளுக்கு எதிராக அரசியல் கட்சி, தொழிற் சங்கம் உள்ளடங்கலான தொழிலாள வர்க்க அமைப்புகளை பேண தொழிலாளரின் பாதுகாப்பு குழு சகல வேலைத்தலங்களிலும் கட்டியெழுப்பப் பட வேண்டும்

தொழிற்சங்க அமைப்பை பேண தொழிலாள பாதுகாப்புப் படைக்காக பகிரங்கமாக பிரசாரம் செய்து முன்னணியில் நிற்க சகல தொழிலாள வர்க்க அமைப்புகளும் முன் நிற்க வேண்டும். இதற்கு தேவையான பணச் செலவினை தமது அங்கத்தவர்களிடையே பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த எதிர்ப் புரட்சிகர சக்திகளை எதிர் கொண்டு தமது போராட்டத்தை முன்னெடுத்து செல்ல

★ நகர்ப்புற தொழிலாளியின் சோவியற் சபையையும் கிராமப்புற தொழிலாள–ஒடுக்கப்பட்ட விவசாயிகளது சோவியற் சபையையும்,

★ இச் சோவியற் சபைகளுக்கு கீழான ஒழுங்கு படுத்தப்பட்ட ஆயுதபாணி படையை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படுதல் அவசியம்,

இந்த ஆயுதபாணி படையினருடாக அரச இயந்திரத்தினதும் ஏனைய பிற்போக்கு தாக்குதல்களுக்கும் எதிர் தாக்குதல் வழங்கி அவற்றை சிதறடிப்பதற்கான பிரசாரமும் செய்யவும் செயல் ரீதியில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இங்ஙனம் கட்டியெழுப்ப பட்ட தமிழீழத்தின் தொழிலாளரதும், வறிய விவசாயிகளது சோவியற் சபைகளது மகா நாட்டையும் சிறீலங்கா தொழிலாளரதும் வறிய விவசாயிகளது சோவியற் சபைகளது மகா நாட்டையும் சுயேட்சையாக இணைக்கும் தமிழீழ – சிறிலங்கா ஐக்கிய சோசலிச குடியரசு ஒன்றுக்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்:

தொழிலாள வர்க்கம் சனநாயக சோசலிச புரட்சியின் செயற்றிட்டத்தை செயற்படுத்துவதான இப் போராட்டத்தில் யூ என்.பீ: அரசாங்கம் உள்ளடங்கலான முதலாளித்துவத்தின் தாக்குதலுக்கெதிராக அணி திரண்டு தயாராக வேண்டும்.

★ இந்திய–இலங்கை ஆக்கிரமிப்பு படையை வடக்கு–கிழக்கு பகுதிகளிலிருந்தும் அகற்று! தமிழ் விடுதலை பேராளிகள் மேல் கைவையாதே! தமிழ் தேசிய இனத்தின் தேசிய சுய நிர்ணய உரிமையை வழங்கு! ஆருவது அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தை அகற்று.

★ தோட்டத் தொழிலாளரது குடியுரிமையை வழங்கு! 1948 குடியுரிமைச் சட்டம் 1964சிறிமா–சாஸ் ஒப்பந்தம், 1987 இந்திய–இலங்கை உட்பட சகல அடக்கு முறை சட்டங்களை அகற்று!

★ உயர்ந்து செல்லும் வாழ்க்கை செலவினத்திற்கேற்ப உயர்ந்த சம்பளம்.

★ தொழில்களிலிருந்தும் நீக்குதல், தனியார் மயமாக்கலுக்கு எதிராக தொழிற்சாலைகளில் உள்ளமர்ந்து கொள்!

★ முதலாளித்துவ வியாபாரங்களின் கணக்கேடுகளை தொழிற் சங்கங்கள் பார்வைக்காக திறந்து வை!

★ தொழிற் சங்கங்களில் கை வையாதே!

★ விலக்கப்பட்ட வேலை நிறுத்தகாரரை தொழியிலமர்த்து!

★ சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

★ மக்கள் விடுதலை முன்னணிக்கும் தமிழ் விடுதலை அமைப்புகளுக்கும் விதிக்கப்பட்ட தடையை அகற்று!

★ சுகாதார கல்வி சேவை வெட்டுகளை நிறுத்து!

★ விவசாய கடன்களை திருப்பி செலுத்துவதை நிராகரி! நீர் வரியை அகற்று! கொள்ளையடித்த காணிகளை மீண்டும் விவசாயிகளுக்கு வழங்கு!

★ தொழிலற்ற வர்களுக்கு வாழ்க்கை செலவுபடி வழங்கு!

என்ற தொழிலாளவர்க்கத்தினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் பாரிய கோரிக்கைகளை சூழ்ந்து மறியல் போராட்டம் வேலைத் தலங்களில் உள்ளமர்ந்து கொள்ள ஒழுங்கு செய்தல் என்பதற்காக யூ.என்.பீ. அசாங்கத்தை விரட்டியடிக்கும் பொதுவேலை நிறுத்தத்தை தயார் செய்ய தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மகாநாட்டை கூட்ட தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டும் போராட்டம் அவசியமான நடவடிக்கையாகும். இப்போராட்டத்தில் தொழிலற்ற இளைஞரை அணி திரட்டி தொழிற்சங்க அமைப்புகளுக்கு சார்பானதாக அமைக்கவேண்டும். இதற்கான போராட்டத்திற்காக சகல தொழிலாள வர்க்க அமைப்புகளையும் ஒழுங்கு கூட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யூ.என்.பீ. அரசாங்கத்தை விரட்டியடிக்க தொழிலாள வர்க்க போராட்டத்தை தயாராக்கவும், தமிழ் தேசிய இனத்தையும் விவசாய மக்களையும் தொழிலாள வர்க்க தலைமைக்கு கீழ் ஒன்று படுத்தவும் முக்கிய தடையாக சமசமாஜ – கம்யூனிச கட்சிகள் இந்திய–இலங்கை ஒப்பந்தத்திற்கு இந்திய ஆக்கிரமிப்பிற்கும், யூ:என்:பீ. அரசாங்கத்திற்கும் வழங்கும் ஆதரவையும் சிறீலங்கா மக்கள்கட்சியுடன் நடந்தும் கூட்டு விளங்குகிறது. முதலாளித்துவமுடன் டத்தும் இப் பிற்போக்கு தொடர்புகளுக்கும் முதலாளித்துவ தேவைகளுக்கு சார்பாக தொழிலாள வர்க்க வேலைத்திட்டத்தை வெட்டி தொழிலாள வர்க்கத்தை ஸ்தம்பிக்கவும் அதன் போராட்டத்திறகு விலங்கு போடவும் இத்தலைமைகள் செயற்படுகின்றன.

சமசமாஜ–கம்யூனிச– நவ சமசமாஜ தலைமைகளது துரோக மக்கள் முன்னணிக்கு சார்பாகவும் மறுபுறம் இலங்கை தொழிலாள–விவசாயிகளின் தலைமை யூ என்,பீ. அரசாங்கத்திற்கு வழங்கியுள்ள எதிர்ப் புரட்சிகர பக்கமாகவும் விளங்குகிறது: இத் தலைமைகள் தோட்டத் தொழிலாளரது போராட்டத்தை நேரடியாக காட்டிக் கொடுத்துவிட ஆதரவளிப்பது மட்டுமல்ல; அரசாங்கத்திற்கும் தொழிற் சங்க போராட்டங்களை உடைக்கவும், போராளி தொழிலாளரை, இளைஞரை பொலிசாரிடம் பிடித்துக் கொடுக்கவும் முதலாளித்துவ வர்க்கத்தின் சார்பில் பொலிஸ்காரராக விளங்குகின்றனர்.

தொழிலாள வர்க்கத்தின் சார்பில் பேசுவதாக கூறும் ந.ச.ச.க.–கம்யூ–இ:தொ.க தலைமைகளுக்கு முதலாளித்துவ அரசாங்கம் – கட்சிகளுடன் சகல தொடர்பையும் அதற்கான பக்க பலமு வழங்குவதையும் நிறுத்துமாறும் யூ. என் பீ. அரசாங்கத்தை விரட்டியடிக்கப் போராட்டத்தை தயார் செய்யுமாறும் தொழிலாள விவசாய அரசாங்கத்திற்காக போராடுமாறும் தொழிலாள வர்க்கத்னத நிர்ப்பந்திக்க வேண்டும்.

இப்பொறுப்பிலிருந்து நழுவும் சகல தலைமைகளையும் விரட்டி தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர தலைமையை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பது தீர்க்கமானதாகும்.

சமசமாஜ–கம்யூனிச– இ: தொ: கா. தலைமைகளது துரோகத்தைபோல இடதுசாரி, வலதுசாரி மத்தியவாத தலைமைகளது துரோகத்தையும் தமிழ் குட்டி முதலாளித்துவ தலைமைகளது பலவீனத்தையும் முன்கூட்டியறிந்த தொழிலாள வர்க்க தலைமைத்துவ நெருக்கடியை தீர்க்க உரமளித்தது. நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கை கிளையான புரட்சி கம்யூனிஸ்ட் கழகமாகும். இதனல் இந்திய இலங்கை முதலாளிகள் சதியொன்றூடாக முதலாளித்துவ ஆட்சியை பேண முன் வரும்போது அதற்கெதிராக தமிழ் தேசிய இனத்திற்கும் வறிய விவசாயிகளுக்கும் வழிகாட்ட முயலும் ஒரே ஒரு அமைப்பாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விளங்குகிறது.

இந்திய இலங்கை முதலாளது சதியை முன் கூட்டியே உணர்ந்து தமிழ் முதலாளிகளதும் குட்டி முதலாளித்துவ தலைமைகளதும் பலவீனத்தை உணர்த்தி ல.ச.ச. க–கம்யூனிச இ. தொ. கா. ஏனைய துரோக தலைமைகளது முதலாளித்துவ பாணி அரசியலின் விளைவினை அம்பலமாக்கி, யூ. என், பி. அரசாங்கம் உள்ளடங்கலான முதலாளித்துவத்திற்கெதிராக போராடும் வேலைத் திட்டத்தை தொழிலாள வர்க்கத்திடம் சமர்ப்பித்தது புரட்சி கம்யூனிஸ்ட் கழகமே: உபகண்டத்தின் தொழிலாள் வர்க்க போராட்டத்தின் அனைத்துலகவாத இணைப்பை கட்டியெழுப்ப போராடி இந்தியாவின் சோஷலிச லேபர் லீக்லக புரட்சிகர தலைமைத்துவமாக நிலை நாட்டுமாறு புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் தோழமையுடன் வேண்டுகிறது. அங்ஙனமே இப்போராட்டத்தை உலக பாட்டாளி வர்க்கம் உலக சோஷலிசத்திற்காக நடத்தும் போராட்டத்திலிருந்தும் பிரித்துவிட முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளது நன்கு நிரூபித்துள்ளது. உலக சோஷலிச புரட்சியின் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவை கட்டியெழுப்பும் பொறுப்பிற்கு பு. க. கழகம் அதன் ஏனைய கிளைகளுடன் உறுதியாக உரமளித்து நிற்கிறது. இலங்கையிலும், தமிழீழத்திலும் தொழிலாள வர்க்கம் சோஷலிச புரட்சியின் ஒரம்சமாகும். அது தொழிலாள வர்க்கத்தை கீழ்ப்படுத்தும் உலக ஏகாதிபத்தியத்தினை துடைத்து கட்டுவதற்கான போராட்டத்துடன் இணைந்துள்ளது.

மக்கள் முன்னணியின் வலைக்குள் அதனூடாக சுமத்தப்படும் இநதிய–இலங்கை முதலாளித்துவத்தினை தோற்கடிக்கும் புரடசிகர முன்நோக்கு செயற்றிட்டம், அமைப்பு என்பவற்றை சமர்பித்துள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்

★ 8ம் பககம் பாாக்கவும்

### தலவாக்கலை

# பாமஸ்டன் தோட்ட தொழிலாளர்களுக்கு எதிரான சதியை தோற்கடி!

தலவாக்கலை பாமர்ஸ்டன் தோட்டத்தின் தொழிலாளர்கள் மத்தியில் மதவேறுபாடுகளை உண்டுபடுத்தி அவர்களை கத்தோலிக்க, ஹிந்து மத அடிப்படையில் மோத சதி செய்த ஸ்டிவன் பீரிஸ் என்னும் நபர் தொழிலாளரின் போராட்டத்தினால் தோட்ட சேவையில் இருந்து அகற்றப்பட்டதாக அத்தோட்ட தொழிலாளர்கள் "தொழிலாளர் பாதை"க்கு அறிவித்தனர். அத்தோடு தோட்ட இ. தோ. கா. கிளையிலிருந்து 160 தோட்ட தொழிலாளர்கள் விலகி ஸ்டாலினிச சி பி: டப்ளியு.யூ. சங்கத்தில் இணைந்ததாக அறிய வருகிறது.

'தொழிலாளர் பாதை'யும் புரட்சி கம்யூனிஸ்ட் கழகமும், தொழிலாளர் மத்தியில் இன, மத வேறுபாடுகளை உண்டுபடுத்தும் நாசகாரி சக்திகள் சம்பந்தமாக விழிப்புடன் இருக்கும்படி அபாய அறிவிப்பு விடுக்கின்றது.

கடந்த சில கிழமைகளுக்கு முன் கத்தோலிக்க தொழிலாளர்களின் பூஜை தினத்தன்று மற்றைய தொழிலாளர்கள் பறித்த தேயிலை இலைகளை நிறுத்து எடுக்க நிர்வாகம் மறுத்ததன் மூலம், நடைமுறைபடுத்திய இவ்வாத்திரம் ஊட்டும் சம்பவம் தோட்டத் தொழிலாளர் மத்தியில் மத சார்பான வேறுப்பை உண்டு படுத்தி அவர்களை பிரித்து வைத்து ஆளும் திட்டமேயாகும். இச் சம்பவத்திற்கு எதிரான வேலை நிறுத்தம் நடந்த பொழுது 40 தொழிலாளரை கஙுங்கானித்தனத்திற்கு இட்டு சென்ற தோட்ட இ. தோ:கா. தலைவருக்கு எதிராக தொழிலாளர்கள் மத்தியில் பலத்த விரோதம் வளர்ந்தது.

தொழிற் சங்கங்களை மாற்றுவதிலோ இன, மத ரீதியாக பிரித்து நடப்பதிலோ முதலாளித்துவத்தினதும் நிர்வாகத்தினதும் சுரண்டலும் முகம் கொடுக்க முடியாது. மாறு இவைகள் தொழிலாளர்களின் ஒற்றுமைமை குலைத்து அவர்களை பலவீனப் படுத்தி முதலாளித்துவத்திற்கு அடிபணியவே உதவும்.

தொழிலாளர்கள், காட்டிக் கொடுக்கும் இத் தலைமைகளுக்கு எதிராக தம்முடைய அரசியல் போராட்டத்தை முன்னெடுப்பது இன்றியமையாது. தொண்டமானை யூ. என்.பீ அமைச்சரவையிலிருந்து வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கவும் சமசமாஜ - கம்யூனிஸ்ட், நவ சமசமாஜ கட்சி முதலாளித்துவ சிறீலங்கா மக்கள் கட்சி"/டன் அமைத்துள்ள மக்கள் முன்னணியை தகர்க்கும் போராட்டத்திற்காகவும் ஒன்றிணைய வேண்டும்: முதலாளித்துவ அரசினது திட்டங்களை தோற்கடிக்கு முகமாக தோட்டங்களையும், வேலைத் தலங்களையும் தொழிலாளர்-விவசாய அரசாங்கத்தை நிறுவும் சோஷலிச போராட்டத்தை ஆயுத்தப்படுத்த முன் வர வேண்டும். இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடும் புரட்சிக் கட்சியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணைந்து தொழிலாள வர்க்க அனைத்துலகவாதத்திற்கு போராடுவது இன்று அத்தியாவசியமாகும்.

## எதிர்ப்புரட்சி இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் . . .

★ 2ம் பக்கத் தொடர்ச்சி

இந்திய-இலங்கை முதலாளிகளின் சதிக்கும் எதிராக தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழ் தமிழ் தேசிய இனத்தையும், ஏழை விவசாயிகளையும் அணி திரட்டுவதற்கான வாய்ப்பு முன்னெருபோதும் இல்லாத விதத்தில் உருவாகியுள்ளது. இந் நிலையில் இத் தலைவர்கள் தமது துரோக அரசியல் மூலம் இராணுவ சர்வாதிகாரத்துக்கு தொழிலாள வர்க்கத்தை அடிமைப்படுத்த டற திலை ரீதியாக தொழிற்படுகின்றனர்.

இவர்கள் கடந்த ஆண்டினுள் உச்சக் கட்டத்திற்கு எடுத்துச் சென்ற துரோகங்களின் மூலம் தொழிலாள வர்க்கம், தமிழ் தேசிய இனம், ஏழை விவசாயிகளுக்கு எதிரான பிற்போக்கு சக்திகளான யூ.என்.பி-சிறீலங்கா - சிங்கள குட்டி முதலாளித்துவ இனவாத மக்கள் விடுதலை முன்னணி ஆகிய சக்திகளைப் பலப்படுத்தியுள்ளனர். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு தனது அறிக்கையில் இத் துரோகிகளைப் பற்றிக் குறிப்பிட்டதாவது:

''மேலும் வடக்கு - கிழக்கில் இந்தியர்களின் பிரசன்னத்தை அங்கீகரிப்பதன் மூலம் இது ஒடுக்கப்படும் சிங்கள விவசாயிகளின் நியாயமான தேசிய உணர்வுகளை இரக்கமற்ற முறையில் புறக்கணிப்பதோடு, படுபிற்போக்கு மக்கள் விடுதலை முன்னணியினதும் அதன் நம்பிக்கைக்குரிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆலோசகர்களதும் கரங்களைப் பலப்படுத்துகின்றது இக்கொள்கை குட்டி முதலாளித்துவ வெகு ஜனங்களின் கண்களில் தொழிலாளர் இயக்கத்தை செல்வாக்கு இழக்கச் செய்யவும் சிங்கள இன வெறியின் அடிப்படையிலான பாசிச இயக்கத்தின் பெருக்கத்துக்கும் உதவுகின்றது. இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தினை இலங்கை முதலாளி வர்க்கத்துக்கு எதிரான வர்க்கப் போராட்டத்துடனும், அத்தோடு இதே வர்க்கப் போராட்டத்தினை சிங்கள, தமிழ் வெகு ஜனங்களை ஜனநாயக ரீதியில் ஐக்கியத்துடன் இணைப்பதற்குப் பதிலாக சமசமாஜக் கட்சி ஒடுக்கப்படும் சனத்தொகையின் சகல பிரிவினரையும் அந்நியமாக்கச் சாத்தியமான அனைத்தையும் செய்து வருகின்றது'' ('இந்திய - இலங்கை ஒப்பந்தமும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்' 'தொழிலாளர் பாதை' பிரசுரம்)

இந்திய-இலங்கை உடன்படிக்கை, இராணுவ ஆக்கிரமிப்பு, மாகாண சபைகள் முதலான சகல பிற்போக்கு நடவடிக்கைகளுக்கும் உதவியளிப்பதன் மூலம் யூ.என்.பி. அரசாங்கத்துடன் ஒட்டியுறவாடும் சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் மறுபுறத்தில் ஏகாதிபத்திய-முதலாளித்துவ அமைப்பைக் காக்கும் வேலைத் திட்டத்துக்கு தொழிலாள வர்க்கத்தை கட்டிப்போடுவதன் மூலம் பிற்போக்கு சி.ல.சு. கட்சிக்கும் அவ்வாறே வலது சாரி இனவாத இயக்கம் நடாத்திவரும் மக்கள் விடுதலை முன்னணி கிராமப் புறங்களை ஊடுருவதற்கான நிலைமையையும் சிருஷ்டித்துக் கொடுத்துள்ளது.

இத்துரோகத்துக்கு எதிராக சோசலிசப் புரட்சியின் பதாகையின் கீழ் தொழிலாள வர்க்கம், ஏழை விவசாயிகள் தமிழ் தேசிய இனத்தினை ஐக்கியப்படுத்தி அணிதிரட்ட முன் வருமாறு சகல நனவுள்ள தொழிலாளர்களையும் ஏழைகளையும், விடுதலைப் போராளிகளையும் வேண்டுகின்றோம். சோசலிச, ஜனநாயக வேலைத் திட்டங்களுக்காகப் போராடக் கூடிய ஒரே பாதை சோசலிசப் புரட்சி முன் நோக்கின் அடிப்படையில் அணிதிரள்வதே.

சமசமாஜ - கம்யூனிஸ்ட் - இ.தொ.கா. தலைவர்கள் யூ. என்.பி. அரசாங்கத்துடனும் மற்றும் முதலாளித்துவ கட்சிகளுடனும் கொண்டுள்ள உத்தியோகப்பற்றுள்ளதும் உத்தியோகபற்றற்றதுமான கூட்டுக்களை உடைத்து, தொழிலாள வர்க்கத்தின் வர்க்கப் போராட்டங்களை அணிதிரட்டவும், யூ. என்: பி. அரசாங்கத்தை வெளியேற்றி, தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணரவும் செயற்படும்படி கோரும் அரசியல் போராட்டத்தை உக்கிரமாக்கும்படி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது. இந்த அரசியல் போராட்டத்தின் இலக்கு, தொழிலாள வர்க்கத்தை சுயாதீனமாக அணி திரட்டுவதற்கு முட்டுக்கட்டையாக உள்ள தலைவர்களை அம்பலப் படுத்தி புரட்சிக் கட்சியை கட்டி எழுப்புவதே, புரட்சிக் கட்சியை கட்டி எழுப்பும் பொருட்டு உடன் ஈடுபடுவதன் மூலம் மட்டுமே இன்று பெரும் அவசியமாகவுள்ள தமிழ் ஈழ, இலங்கை சோசலிச குடியரசுக்கான முன்நோக்குக்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியும்.

● இந்திய-இலங்கை உடன்படிக்கை ஒழிக! இந்திய-இலங்கை இராணுவம் வடக்கு கிழக்கிலிருந்து வெளியேறு! தமிழ் தேசிய இனத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையை ஊர்ஜிதம் செய்! தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கை வைக்காதே!

● யூ என். பி. அரசாங்கத்தை வெளியேற்று! தமிழீழம் இலங்கை ஐக்கிய சோசலிச குடியரசுக்காக போராடு! இந்திய துணைக் கண்டத்தில் சோசலிசப் புரட்சியை நோக்கி முன்னேறு!

## முதலாளித்துவ மக்கள் முன . . .

★ 7ம் பக்கத் தொடர்ச்சி

தாமதியாது இணையுமாறு சகல தொழிலாள ஒடுககப்படும் மக்களிடம் நாம் வேண்டுகிறோம். அதன் வெளியீடுகளான "தொழிலாளர் பாதை" "கம்கறு மாவத்தை" பத்திரிகைகளை படிக்குமாறும் நாம் வேண்டுகிறோம்.

அங்ஙனமே மக்கள் முன்னணியாளருக்கெதிராக புரட்சிக கம்யூனிஸ்ட் கழக போராட்டத்தை நடத்தி இளைஞரை தொழிலாள வர்க்க தலைமைத்துவத்தின் கீழ் அமைப்பு ரீதியிலாக்க போராடும் 'இளம் சோஷலிஸ்ட்டுகள்'' அமைப்பில் இணையுமாறு சகல இளைஞரையும் நாம் கோருகிறோம்.

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு — 10, 1-வது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினல் மஹரகம நாகஹவத்தை வீதி 51ம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.